மாநகர சபை, யாழ்ப்பாண

விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

பக்கங்கள்: பத்து

சங்கு 09 வள்ளுவர் ஆண்டு 2039 சித்திரை 22 ஞாயிற்றுக்கிழமை (04.05.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 137




# உலகில் புலிகளே சக்தி படைத்தவர்கள்

# முகமாலையில் அவர்கள் அதிக பலத்துடன் உள்ளனர்

## இராணுவத் தளபதி பேட்டி

(கொழும்பு)

**உலகிலுள்ள போராளிகளிடையே புலிகள் சக்தி படைத்தவர்கள் என்று கூறியுள்ள இராணுவத் தளபதி சரத் பொன்சேகா, முகமாலையில் புலிகள் எப்போதும் மிகப் பலத்துடன் உள்ளனர் என்றும் 'லங்காதீப' பத்திரிகைக்கு வழங்கிய நேர்காணலில் தெரிவித்துள்ளார்.**



'லங்காதீப' பத்திரிகைக்கு அவர் வழங்கிய முழுமையான நேர்காணல் வருமாறு,

கேள்வி:- அண்மையில் முகமாலை பாதுகாப்பு முன்னரங்கில் ஏற்பட்ட தாக்குதலானது அண்மைக் காலங்களில் படையினர் மீது இடம்பெற்ற மிக மோசமான தாக்குதலாகும் இந்தத் தாக்குதல் சம்பந்தமாக உங்களின் கருத்து என்ன?

பதில்: புலிகளின் இந்தத் தாக்குதல் திட்டம் சம்பந்தமாக எமக்கு ஏற்கனவே தெரிய வந்திருந்தது. நாம் அதற்கு முகம் கொடுப்பதற்கு தயாராக இருந்தோம்.

தாக்குதல் இடம்பெற்ற தினம் அதிகாலை 2.30 மணியளவில் புலிகள் பாதுகாப்பு முன்னரங்குகளை நோக்கி கடுமையான மோட்டார் மற்றும் ஆட்லறித் தாக்குதல்களை மேற்கொண்டனர்.

நாம் அதனை வெற்றிகரமாக முறியடித்தோம். பாதுகாப்பு முன்னரங்குகள் இரண்டிற்கும் இடையில் சுமார் மூன்று மணிநேரம் உக்கிர மோதல் இடம்பெற்றது.

விடியலுக்கு முன்னரே எமது 5 பற்றாலியன்கள் அவர்களின் பாதுகாப்பு அரண்களை அழித்து சுமார் 700 மீற்றர் வரை முன்னேறி சென்றனர். முற்பகல் 11.30 வரை நாம் அந்த இடத்தில் நிலை கொண்டிருந்தோம். அங்கிருந்து 8 கிலோ மீற்றர் தூரம் வரை குறுக்கே கிளாலி வரை தொடர்ச்சியாக தாக்குதல் நடத்தினோம்.

புலிகள் மோட்டார் (10ஆம் பக்கம் பார்க்க)

## அயர்லாந்தின் அனுபவம் இலங்கைக்கு தீர்வாக அமையும்

### அமைச்சர் திஸ்ஸ விதாரண தெரிவிப்பு

(கொழும்பு)

பிரித்தானியா மற்றும் அயர்லாந்தில் பெற்ற அனுபவத்தைக் கொண்டு ஒற்றை ஆட்சியின் கீழ் சமஷ்டி என்ற யோசனையை இலங்கை இனப்பிரச்சினைக்கு தீர்வாக முன்வைக்கவுள்ளதாக அமைச்சர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

இந்த யோசனைக்கு இலங்கையின் 2 பிரதான கட்சிகளினதும் ஆதரவைப் பெறுக் கொள்ள முயற்சிகள் மேற்கொள்ளப்படுமென அவர் தெரிவித்தார்.

அனைத்துக் கட்சிக்குழுவின் இந்த யோசனைகளில் இனப்பிரச்சினையைத் தீர்ப்தற்கான எவ்வித அடிப்படை அம்சங்களும் இல்லை என ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் (10ஆம் பக்கம் பார்க்க)

## வட மாகாண ஆளுநராக ஓய்வு பெற்ற இராணுவ ஜெனரல்?

(கொழும்பு)

வடமாகாண ஆளுநராக ஓய்வு பெற்ற இராணுவ ஜெனரல் ஒருவரை நியமிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்திருப்பதாக நம்பகரமாக அறியவருகிறது.

வடக்கில் முதலாவதாக நியமிக்கப்படும் ஆளுநர் தமிழராக இருக்கவேண்டுமென அரசாங்கத்துடன் இணைந்து செயல்படும் கட்சிகள் கேட்டிருந்த போதிலும் சிங்களவர் ஒருவரையே நியமிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாம்.

இதேவேளை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் வடபகுதி அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ள விசேட செயலணிக்குழு ஒன்றை ஜனாதிபதி நியமித்துள்ளார்.

மூன்று பேர் அடங்கிய குழுவில் மீள்குடியேற்ற அனர்த்த நிவாரண அமைச்சர் ரிசாட் பதியுதீன், நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதியின் சகோதரருமான பசில் ராஜபக்ஷ ஆகியோர் அடங்கியுள்ளனர். (ந-5)

## கொழும்பில் நேற்று பாரிய தேடுதல் 300க்கும் அதிகமான தமிழர் கைது




(கொழும்பு)

தலைநகர் கொழும்பின் புறக்கோட்டை மற்றும் கொச்சிக்கடை பகுதிகளில் நேற்று அதிகாலை முதல் படையினரும் பொலி ஸாரும் மேற்கொண்ட சிறப்பு தேடுதலில் 300க்கும் அதிகமான தமிழர்கள் கைது செய்யப்பட்டு தீவிர விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டனர்.

புறக்கோட்டை பொலிஸ் நிலையத்திற்கு ஏற்றிச் செல்லப்பட்டவர்களில் 15 பேர் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். நேற்று சனிக்கிழமை அதிகாலை 5 மணியளவில் இந்தத் தேடுதல் இடம்பெற்றது.

தேடுதலை முன்னிட்டு புறக்கோட்டையின் சில பகுதிகளுக்கும் கொச்சிக்கடை பகுதிக்குமான போக்குவரத்துக்கள் முற்றாக துண்டிக்கப்பட்டன. அதிகாலை முதல் படையினரும் பொலிஸாரும் வீடுகளுக்குள் நுழைந்து தேடுதலில் ஈடுபட்டனர்.

அதிகாலைவேளை நித்திரையில் இருக்கும் போதே படையினரும் பொலிஸாரும் (10ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் நாளை ரணில் தேர்தல் பிரசாரம்

(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மட்டக்களப்பில் தேர்தல் பிரசார கூட்டத்தை நடத்துவதற்கு அரசாங்கம் மைதானம் எதனையும் வழங்கவில்லையென ஐக்கிய தேசியக்கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, கிழக்கு மாகாண தேர்தல் பிரசார கூட்டங்களை நடத்துவதற்கு நாளை திங்கட்கிழமை மட்டக்களப்பு மாவட்டத்திற்கு விஜயம் செய்ய இருப்பதாக கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

மட்டக்களப்பில் தேர்தல் பிரசாரக் கூட்டத்தை நடத்துவதற்கு மாநகர சபை மைதானத்தை கேட்டதற்கு அரசாங்கம் அதற்கான அனுமதியை வழங்கவில்லை. அது பற்றி அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

அரசாங்கத்தின் உத்தரவுக்கு அடிபணிந்து மட்டக்களப்பு மாநகர சபை மைதானத்தை தேர்தல் பிரசார நடவடிக்கைக்கு வழங்குவதற்கு மாநகர (10ஆம் பக்கம் பார்க்க)



க.பொ.த சாதாரண தரப் பரீட்சை 2007இல் கோப்பாய் எக்ஸ்பிறஸ் கல்வி நிறுவனத்தில் கற்று அதிவிசேட சித்தி பெற்ற மாணவர்கள் இலங்கை வங்கியின் அனுசரணையுடன் நேற்று கௌரவிக்கப்பட்டனர். இந்நிகழ்வில் கலந்து கொண்ட நல்லை ஆதீன முதல்வர் ஆசியுரை வழங்குவதையும், நிறுவன இயக்குநர் எஸ்.வரதராஜா, நிகழ்வின் பிரதம விருந்தினர் வைத்திய கலாநிதி திருமதி தாரணி சிவகோணேசன், நல்லூர் கோட்டக்கல்விப் பணிப்பாளர் கே.வி.குணசேகரம் ஆகியோர் பாராட்டுரைகள் வழங்குவதையும் படங்களில் காணலாம். (படங்கள்-மாறன்)

## மடுமாதா தேவாலயப் பகுதியை சமாதான வலயமாக்குமாறு எவரும் கேட்கவில்லை - கோத்தபாய

(கொழும்பு)

மடுமாதா திருத்தலத்தை சுற்றியுள்ள இரண்டரை கிலோ மீற்றர் பிரதேசத்தை மோதல் தவிர்ப்பு பிரதேசமாக உருவாக்கும் கோரிக்கை எதுவும் பாதுகாப்பு அமைச்சுக்கு இதுவரை கிடைக்கவில்லை என பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ சிங்கள வார இதழ் ஒன்றுக்கு தெரிவித்துள்ளார்.

மடுமாதா திருத்தலத்தை சுற்றியுள்ள இரண்டரை கிலோ மீற்றர் பகுதியை அமைதி வலயமாக்கக் கோரும் தமது கோரிக்கைக்கு இதுவரை எதுவித சாதகமான பதிலும் கிடைக்கவில்லை என மன்னார் மறைமாவட்ட ஆயர் அதி.வணக்கத்துக்குரிய இராயப்பு யோசப் தெரிவித்திருப்பது குறித்து பாதுகாப்பு அமைச்சின் செயலாளரிடம் கேட்டபோதே அவர்மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் இது குறித்து மேலும் தெரிவித்துள்ளதாவது, மடுத் தேவாலப் பகுதி தற்போது அரச கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது. தலதாமாளிகை, ஜயஸ்ரீமா போதி ஆகிய மத வழிபாட்டு தலங்களுக்கு வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பே வரலாற்று புகழ்மிக்க மடுமாதா தேவாலயத்திற்கும் வழங்கப்படும்.

அரசின் தேவாலயங்களுக்கான பாதுகாப்புக் கொள்கை அங்கு அமுல் செய்யப்படும்.மடுத் தேவாலயப் பகுதியில் ஆயுதம் தாங்கிய பாதுகாப்பு படையினரை நிறுத்த வேண்டிய அவசியம் இல்லை. அங்கு பொலிஸார் பக்தர்களுக்கும், மதகுருமார் களுக்கும் தேவையான பாதுகாப்பை வழங்குவர் என்றார்.

(ந-5)

## வன்னியிலுள்ள சிறுவர்களுக்கு சத்துணவு வழங்க யுனிசெப் நடவடிக்கை

(கொழும்பு)

வன்னிப் பகுதியில் போசாக்கின்மையால் பாதிக்கப்பட்டிருக்கும் சிறுவர்களுக்கு சத்தூட்டம் கொண்ட பாலை யுனிசெப்பின் ஊடாக வழங்க மனித நேயப் பணிகள் தொடர்பான ஆலோசனைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது.

போசாக்கின்மையால் பாதிக்கப்பட்டிருக்கும் அனைத்து குழந்தைகளுக்கும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஊடாக திரிபோசா வழங்கப்படுவதுடன் சிறுவர்களுக்கும் போசாக்கூட்டும் திட்டத்துக்கு அமைய சத்துணவும் வழங்கப்படும் என சுகாதார சேவைகள் அமைச்சின் செயலாளர் டாக்டர் கஹந்தலியனகே தெரிவித்துள்ளார்.

சிறுவர்களுக்கு திரிபோசா வழங்கும் திட்டத்துக்கு யுனிசெப் அமைப்பு இணக்கம் தெரிவித்துள்ளது என அவர் கூறியுள்ளார். அத்துடன் மட்டக்களப்பு மாநகர சபை முதல்வர் பி.சிவகீதா, மனித நேயப்பணிகள் தொடர்பான ஆலோசனைக் குழுவைத் தொடர்பு கொண்டு கிழக்கு மாகாணசபையின் அபிவிருத்தி குறித்து நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

அத்துடன் மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளால் விடுவிக்கப்பட்டு அரசாங்கத்திடம் கையளிக்கப்பட்டிருக்கும் 28 சிறுவர் போராளிகள் குறித்து கடந்த செவ்வாய்க்கிழமை யுனிசெப்பின் இலங்கைக்கான பணிப்பாளர், இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ரொபேட் ஓ. பிளேக் உள்ளிட்ட உயர்மட்டக் குழு கூடி ஆராய்ந்துள்ளது. (ந-5)

## சர்வதேச குடும்பநல உத்தியோகத்தர் தினம்

சர்வதேச குடும்பநல உத்தியோகத்தர் தினத்தை முன்னிட்டு இன்று காலை9 மணிமுதல் பிற்பகல் 2 மணிவரை நாவலர் கலாசார மண்டபத்தில் விசேட நிகழ்வு இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வைத்திய கலாநிதி ஏ.எஸ். சிறிதரன் கலந்து கொள்வதுடன் சிறப்பு விருந்தினர்களாக யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளா வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் மற்றும் வைத்திய கலாநிதி எஸ்.திருமகள், வைத்திய கலாநிதி கே.சிவபாதம் ஆகியோர் கலந்து சிறப்பிக்கின்றனர்.

(ந-5)

**மணமக்கள் தேவை**

உயர் இந்து வேளாளர் லண்டன் PR லக். செவ் 34 வயது, 7இல் செவ் அனுஷம் 31வயது, கனடா PR சித்திரை 34 வயது, திருவாதிரை 27 வயது, பிரான்ஸ் 30 வயது கொண்ட மணமகன்களுக்கு அழகிய மணமகள்கள் தேவை. மகம் 30 வயது, மிருகசீரிடம் 25 வயது, சித்திரை 22 வயது, திருவோணம் 34 வயது, பூராடம் 28 வயது கொண்ட மணமகள்களுக்கு மணமகன்கள் தேவை.

தொடர்பு:- 0776317173
7 Pmக்குப் பின் 0715664773 (147)

## மே 10 இற்கு பின்னர் புதிய கட்சி பதிவு செய்யப்படும்

## நந்தன குணதிலக எம்.பி தெரிவிப்பு

(கொழும்பு)

புதிதாக அமைக்கப்பட விருக்கும் அரசியல் கட்சி, உழைக்கும் வர்க்கத்தவர்களை மாத்திரம் கொண்டமைந்த கட்சி அல்ல என ஜே.வி.பியின் அதிருப்தியாளர் நந்தன குணதிலக தெரிவித்துள்ளார்.

புதிதாக உருவ ாக்கப்படவிருக்கும் கட்சியானது ஜே.வி.பியின் 'காபன்' பிரதியைப் போன்றதாக இருக்காது.

றோஹன விஜவீரவால் உருவாக்கப்பட்ட ஜே.வி.பியின் அடிப்படை கொள்கைகளைக் கொண்டதாகவே அமைந்திருக்கும்.

தேசப்பற்று மிக்க, வகுப்புவாதங்கள் குறித்துக் கவலைப்படாதவர்களுக்கு கட்சியில் எந்த நேரமும் கதவு திறந்தே இருக்கு என இணையத்தளமொன்றுக்கு அவர் கூறியுள்ளார்.

இம்மாதம் 10 ஆம் திகதிக்குப் பின்னர் புதிய கட்சி, தேர்தல் திணைக்களத்தில் பதியப்பட்டு, சின்னம் என்பன அறிவிக்கப்படும்.

அடிமட்டத்தில் உள்ளவர்கள் கூட தேர்தலில் போட்டியிடக்கூடிய வாறு கட்சியின் கொள்கைத்திட்டம் தயாரிக்கப்படும் எனவும், இவை தொடர்பான பேச்சுவார்த்தைகளில் தொடர்ந்தும் ஈடுபட்டுவருவதாகவும் நந்தன குணதிலக தெரிவித்துள்ளார்.

புதிய கட்சியை அமைப்பது தொடர்பாக ஜே.வி.பியின் பிரசார செயலாளர் விமல் வீரவன்ச மற்றும் நந்தன குணதிலக ஆகியோருக்கிடையில் கடந்த வியாழக்கிழமை முக்கிய சந்திப்பொன்று இடம் பெற்றிருந்தது.

இதேவேளை ஜே.வி.பியின் அதிருப்தியாளர்களால் உருவாக்கப்படவிருக்கும் புதிய கட்சியால் தமக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படப் போவதில்லையென ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா கூறியிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (5)

**தனியார் பாதுகாப்பு சேவை**

அரச பணிமனைகளில் தனியார் பாதுகாப்பு சேவையில் கடமை புரிவதற்கு ஆண், பெண் இருபாலாரிடமும் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

கல்வித்தகைமை:- க.பொ.த (சா/த)

பெண்கள் கடமை நேரம் காலை 6.00மணி தொடக்கம் மாலை 6.00மணிவரை தொழில் இலாகாவின் சட்டவிதிகளுக்கமைவான வேதனம் வழங்கப்படும்

பணிப்பாளர்
அகல் பாதுகாப்பு சேவை
1220, பருத்தித்துறை வீதி,
கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.

(1144) தொலைபேசி 0212229670

## பிரியங்கா-நளினி சந்திப்பு குறித்து சட்டபூர்வ விளக்கம் விரைவில்

(சென்னை)

பிரியங்கா -நளினி சந்திப்பு குறித்த சட்டபூர்வ விளக்கத்தை விரைவில் வெளியிட இருப்பதாக ராஜீவ் கொலை வழக்கில் கைதாகி வேலூர் சிறையில் உள்ள ஆயுள் தண்டனைக் கைதி நளினியின் வழக்கறிஞரான இளங்கோவன் தெரிவித்துள்ளார்.

மார்ச் 19 ஆம் திகதியன்று முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் மகளான பிரியங்கா வேலூர் சிறைக்குச் சென்று நளினியை சந்தித்துள்ளார்.

இச்சந்திப்பு மிகவும் இரகசியமான முறையில் நடந்ததாகவும் இதற்கான ஆவணங்கள் எதுவும் சிறையில் இல்லை என்றும் குற்றச்சாட்டுக்கள் எழும்பியிருந்தன.

இந் நிலையில் இச்சந்திப்பு குறித்த விபரங்களை கேட்டு, தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் வழக்கறிஞர் டி. ராஜ்குமார் மனுச் செய்துள்ளார்.

இதற்கான பதிலுடன் சிறை அதிகாரிகள் ஆயத்தமாக இருப்பதாகவும் அவை நாளை திங்கட்கிழமை வெளியிடப்படும் என்றும் வழக்கறிஞர் இளங்கோவன் தெரிவித்துள்ளார். (5)

**சேவை நலன் பாராட்டலும் 60 ஆவது அகவை வாழ்த்தும்**

எமது பாடசாலை ஆசிரியை



**திருமதி வசந்தி இராமநாதன்**

அவர்கள் எமது பாடசாலையில் 7 ஆண்டுகளுக்கு மேலாகப் பணியாற்றியதுடன் மொத்தமாக 38 ஆண்டு காலம் ஆசிரியப் பணியை முழுமையாகவும் சிறப்பாகவும் பூர்த்தி செய்து 03.05.2008 ஆம் திகதியிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார்.

ஏழாண்டு காலத்துக்கு மேலாக எமது பாடசாலையில் அவர் ஆற்றிய சேவையைப் பாராட்டி அவருக்கு நன்றி கூறுவதுடன் இந் நன்னாளில் அவருக்கு எமது அறுபதாவது பிறந்த நாள் வாழ்த்துக்களைக் கூறி, அவரது ஓய்வுக் காலம் சீருடனும்சிறப்புடனும் அமைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்!

-பாடசாலைக் குடும்பம்

யா/ சுதுமலை சின்மய பாரதி,
வித்தியாலயம், மனிப்பாய்.

(1145)

# எண் சோதிடம்



### எண் -9 (செவ்வாய்)

(இதுவரை கவனித்த எண்வகை மாந்தருக்கும் வீடுகள் கட்டிக் கொடுத்து, பூமியைச் சீர்திருத்தி, மற்ற வாழக்கை வசதிகளை அமைத்துக் கொடுத்து ஒருவரோடொருவர் சமாதானமாக இருக்கும்படி யோசனை கூறவும் வல்லவரான 9 எண்ணால் குறிக்கப்படுவோரைக் கவனிப்போம். இஞ்சினியர்களாக இருந்து கட்டிடங்களைக் கட்டித்தரும் இவர்களே, அவைகளை நெருப்பு வைத்தும் குண்டு போட்டுத் தகர்த்தெறியும் போர் வீராகவும் காணப்படுகின்றனர்.)

அருட்கவி ஸ்ரீ சுப்பிரமணிய பாரதியார் சக்தியைப் பாடும்போது,

ஓம் சக்தி ஓம் சக்தி ஓம், பராசக்தி
ஓம் சக்தி ஓம் சக்தி ஓம்
சொல்லுக்கடங்காவே பராசக்தி சூரத்தனங்களெல்லாம்
வல்லமை தந்திடுவாள் பராசக்தி வாழி
என்றே துதிப்போம்....ஓம் சக்தி
கணபதி ராயன், அவனது காலைப் பிடித்திடுவோம்
குணமுயர்ந்திடவே, வெற்றி கூற மகிழ்ந்திடவே....ஓம்
வெற்றி வடிவேலன் அவனது வீரத்தினைப் புகழ்வோம்
சுற்றி நில்லாதே பகையே துள்ளி வருகுது வேல்...ஓம்..

என்ற இரத்தினச் சுருக்கமாக வர்ணிக்க முடியாத சக்தியீ பிரவாகத்தைக் குறிப்பிட்டு பின்னர் அது எப்படி ஆக்க சக்தியாகப் பரிணமிக்கிறதென்பதையும் பின்னர் எப்படி எல்லாவற்றையும் அழிக்கும் சக்தியாக விளங்குகிறதென்பதையும் சக்தியின் புதல்வர்களான தெய்வங்கள் மூலம் வெளியிட்டார்.

ஸர்வத்திலும் உள்ளும் புறமும் வியாபித்ததான வெண்மை பொருந்தின தனியொரு தத்துவத்தினையே சிவமாகவும், அதன் சலனத்தில் ஏற்படுவதே செந்நிறங் கொண்ட சக்தியாகவும் அவர்களது புதல்வர்களான ஸ்ரீகணபதியும் ஸ்ரீ சுப்பிரமணியமுமே மின்னல் போன்று தோன்றி தோன்றி மறையும் சக்தியை ஸ்திரமான ஒளியாக ஸ்தாபிப்பவரும், அதே சக்தியை பெரு நெருப்பாக்கி அழிப்பவருமாக முறையே குறிக்கப்படுகின்றனர்.

சக்தி: 5 எண் கொண்டது. ஆக்க சக்தி விநாயகர். 4எண் ஒன்றைத் துணை கொண்டது. அழிப்பு சக்தி-சுப்பிரமண்யர்: 9எண்-5ஐத் துணைகொண்டது.

செவ்வாயால் குறிக்கப்படுகிற இவ்வெண் அழிக்க முடியாதது. எப்படி என்பதை சிறிது ஆராய்வோம். கணிதத்தை ஆதிகாலத்தில் கண்டுபிடித்த முன்னோர் முதலில் கை விரல்களால் எண்ணிப் பார்த்தனர். இக் கணக்கினால் 10-க்கு மேல் எண்ண முடியவில்லை. எண்ணிக்கைக்கு எழுத்துக்களைக் கண்டுபிடிக்கும் போது தான் திரும்பத் திரும்ப பெரிய எண்களை எண்ணும்போது கடைசி எண்ணாக எவ்வெண்ணை வைத்துக் கொள்ளலாம் என்பதை ஆராய்ந்தனர்.

கூட்டுவதற்கும், அதிகப்படி கூட்டுவதான பெருக்கலுக்கும் ஒத்ததாக 9 எண் இருப்பதை அறிந்தனர். அதாவது 9உடன் எதைக் கூட்டினாலும் கூட்டப்பட்ட எண் உருமாறாமல் இருக்கும். உதாரணமாக இப்பொழுது 9உடன் 7எண்ணைக் கூட்டுவோம். 16வருகிறது. 16என்பது 1+6=7 கூட்டப்பட்ட முதல் ஏழு இரண்டாவது ஏழாக இருக்கிறது. கூட்டப்பட்ட பின்னரும் 7 ஆக இருக்கும் தன்மையை இழக்கவில்லை. இந்த குணம் 9ஐத் தவிர மற்ற எந்த எண்ணுக்கும் கிடையாது 9-ஐயே பல முறை கூட்டினால், அதாவது பெருக்கினால் வேறு எண்ணாக மாறாமல் 9 ஆகவே நிற்கும். 9X5=45. 4+5=9 அஸ்திவார எண்ணிற்குத் தேவையானவை இக்குணங் களே. கட்டடம் கட்டும்போது அஸ்திவாரம், மேலே கட்டப்படும் கட்டடத்தின் உருவை நிலை குலைக்காமல் தாங்க வேண்டுமென்றும் அதனால் தான் நிலைகுலையாமல் இருக்க வேண்டுமென்றும் தானே விரும்புகிறோம். இனி இவ்வளவு பெருமைவாய்ந்த 9 எண்ணால் குறிக்கப் பெறும் மாந்தரைக் கவனிப்போம்.

9,18,27 திகதிகளில் பிறப்பவர்களெல்லாம் இவ்வெண்ணின் ஆதிக்கத்தின் கீழ் பிறப்பவராவர்.

திகதி, மாதம், வருஷம் கூட்டி வரும் எண்9 ஆக உடையோரது வாழ்க்கையும் இவ்வாதிக்கத்தின் கீழ் வருவதேயாம். 9 அவர்களது பிறந்ததிகதி எண்ணின் குணங்களைத் தீவிரப்படுத்தி அந்த எண் குறிக்கும் பலன்களைத் தீவிரப்படுத்தி அந்த எண் குறிக்கும் பலன்களை இப் பிறவியிலேயே அடையும் படி செய்யும். இது அவர்களுக்குப் பலப்ராத்தி தரும் எண்ணாகும்.

#### 9 எண்ணின் கீழ் பிறந்தவர்களது குணாதியங்கள்

இவர்கள் போராடவே பிறந்தவர்க்ள். வாழ்க்கை முழுவதும் ஒரே போராட்டமாக இருக்கும். இவர்களில் அறிவு மிகுந்தவர்கள் மனப் போராட்டத்தில் தான் ஈடுபடுவார்கள். அதாவது சாகஸம், தந்திரம், சூழ்ச்சி, கபட மொழிகள்; சுருங்கக் கூறின் உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசும் கலையிலும் நுண்ணிய அறிவில்லாத அடுத்த ரக மனிதர் வாய்ச் சண்டையிலும் வாழ்நாளைக் கழிப்பர். கடைசி ரக மனிதர் சண்டையையே தொழிலாகக் கொண்டு சைன்யத்தல் சேர்ந்துவிடுவார். இவருக்கு சாதாரணமான அடிபிடி சண்டைகளில் சுவாரஸ்யமிருக்காது.

ரண களங்களும், ஊர்கள் பற்றி எரியும் காட்சிகளுமே இவர்களது மனதைக் கவரும். இவர்களுக்கு சாந்தி சமாதானம் முதலியவைகளில் ஈடுபாடில்லை.

## பண்டிட் ஸேதுராமன்

பொதுவாக இவர்கள் எல்லோருக்குமே தேச சேவை செய்யவேண்டுமென்கிற ஆர்வம் பூரணமாக இருக்கும். தேசத்திற்காக எதையும் தியாகம் செய்து போராடுவார்கள். இந்த ஆதிக்கரில் மிகக் குறுகிய நோக்கமுடையவர்கள் கூட தன் இனத்தவருக்கு நன்மை புரிவதில் நாட்டமுடையவராகக் காணப்படுவர். இவர்களுக்குத் தன்னிஷ்டப்படியேதான் காரியங்களை நடத்திச் செல்ல விருப்பமிருக்கும். யாராவது ஆட்சேபித்தால் உடனே போர் மூளும். இவர்களிஷ்டப்படி செய்யமுடியாதபடி பிறர் தடுத்துவிட்டால் உடனே கையை உதறிவிட்டு இக்காரியம் தூள்தூளாகச் சிதறட்டும் என நினைத்து விலகி விடுவார்கள்.

இவ்வாதிக்கரில் அறிவுடையோர் எப்பொழுதும் எதிரியின் பலத்தை ஆராய்ந்த வண்ணமிருப்பர். அதை அனுசரித்தே நடந்துகொள்வதால் தான் இவர்கள் ராஜதந்திரிகளாகின்றனர்.

இவர்கள் சண்டையில் லாபமா, சமாதானத்தில் லாபமா என்பதை ஆராய்ந்து உசிதமானதைச் செய்வார்கள். (அச்சமயங்களில் தான் இவர்களை உலகத்தார் சமாதானப் பிரியர் என்றும், கோபமே வராத சாந்தர் என்றும், பயங்கொள்ளி என்றும் நினைத்து ஏமாறு கின்றனர்). "ஓடுமீன் ஓட உருமீன் வருமளவும் வாடியிருக்குமாங் கொக்கு" என்பது போல் சந்தர்ப்பத்தையும், சூழ்நிலையும் எதிர்பார்த்துக் காத்திருப்பார்கள்.

சண்டையில் நஷ்டம் என்றால் உடனே சமாதானப் பிரியராக காட்சியளிப்பார்கள். சமாதானம் செய்துகொள்ளும்போது இவர்களுக்கே சாதகமான முறையில்தான் முடிப்பர். எண்ணின் பலம் குறைவானால் மேலே குறிப்பிட்ட குணங்களிருக்காது. கோபம், அசூயை முதலியவை மிகுந்திருக்கும் சண்டையிலே உயிரிழப்பர். முரட்டுத்தனத்தால் கெடுதிகள் விளையும். ஆதிக்கம் நன்கமைந்தால் கூரிய அறிவும் வளைந்து கொடுக்குந் தன்மையும் ஏற்பட, ஆதிக்கம் கெட்டால் தீய குணங்களும், முரட்டுப் பிடிவாதமும் காணப்படும்.சிறிய காரியங்களுக்குக் கூட உயிரைப் பணயமாக வைப்பார்கள். அறிவாளி எதிரியைக் கொல்லாமல் கொல்லுவார். மற்றவரோ எதிரியைக் கொல்லவே கொல்லுவார். அந்த ஆதிக்கரில் அறிவாளியை எப்படி அறிவதென வாசகர்கள் சிறிது திகைப்படையலாம்.

(தொடரும்)

## வளர்ப்பு நாய்களுக்கான கருத்தடை தடுப்பூசி ஏற்றல்

யாழ்.மாநகரசபை எல்லைக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கான மலடாக்கல் சத்திரகிசிச்சையும், கருத்தடை ஊசி ஏற்றலும் எதிர்வரும் 8ஆம்திகதி வியாழக்கிழமை நாவலர் வீதியிலுள்ள நாவலர் சிகிச்சை நிலையத்தில் நடைபெறவுள்ளதாக யாழ். மாநகரசபையின் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ம.மரியதாசன் அறிவித்துள்ளார்.

இதில் ஆண் வளர்ப்பு நாய்களுக்கான கருத் தடை சிகிச்சையும், 8 மாதத்திற்கு மேற்பட்ட பெண் வளாப்பு நாய்களுக்கான கருத் தடை ஊசி ஏற்றலும் நடைபெறவுள்ளது. பொதுமக்கள் தங்களது வளர்ப்பு நாய்களை அழைத்து வந்து பயன்பெறுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ஓ)

## தீ விபத்துக்குள்ளான இளைஞர்

பருத்தித்துறையைச் சோந்த 24 வயதுடைய ஜி.சங்கீதன் என்பவர் வீட்டில் சமையலுக்கு உதவிய சமயம் தீவிபத்துக்குள்ளாகியுள்ளார். மேற்படி நபர் கடந்த வியாழக்கிழமை சமையலுக்கு உதவி செய்து கொண்டிருந்த சமயம் மண்ணெண்ணெய் என நினைத்து பெற்றோலை அடுப்பிற்குள் ஊற்றியுள்ளார். இதன்போதே தீவிபத்துக் குள்ளாகியுள்ளார். பின்னர் யாழ்.போதனா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார். (3,4)

## நெல்லியடி ம.ம.வித்தியாலயத்தில் "நவோதய" வாரம் அனுஷ்டிப்பு

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தின் 'நவோதய' பாடசாலை வாரம் நேற்று சனிக்கிழமை முதல் எதிர்வரும் 9ஆம்திகதி வெள்ளிக்கிழமை வரை அனுஷ்டிக்கப்படுகின்றது. இவ்வாரத்தினையொட்டி முதல் நாளான நேற்று பாடசாலைச் சமூகத்தின் பங்கேற்புடனான சிரமதானம் மேற்கொள்ளப்பட்டது.

பாடசாலை முகப்பினை அழகுபடுத்தல் செயற்பாடு முன்னெடுக்கப்படுவதுடன் பாடசாலைச் சுற்றுப்புறத் துப்புரவுப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டன. நவோதய வாரத்தின் இறுதிநாளன்று மாணவர் ஆக்கக் கண்காட்சியுடன் நிகழ்வுகள் நிறைவுபெறும் என வித்தியாலய அதிபர் எஸ்.சேதுராஜா அறிவித்துள்ளார். (ஓ)

## 7 ஆயிரம் தென்னை நாற்றுக்கள் மானிய அடிப்படையில் விநியோகம்

### பிராந்திய முகாமையாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட திட்டமிடல் செயலகத்தின் நிதி உதவியுடன் வடமாகாண தென்னைப் பயிர்ச்செய்கை சபையால் உற்பத்தி செய்யப்பட்ட 7 ஆயிரம் தென்னை நாற்றுக்கள் யாழ். மாவட்டத்திலுள்ள வீட்டுத் தோட்டச் செய்கையாளர்கள் மற்றும் மீளக்குடியமர்ந்தோர்களுக்கு மானிய அடிப்படையில் வழங்கப்படவுள்ளதாக சபையின் பிராந்திய முகாமையாளர் க.தேவேந்திரன் தெரிவித்துள்ளார்.

இதன்பிரகாரம் நாற்று ஒன்று 130 ரூபா வீதம் ஒருவருக்கு ஐந்து நாற்றுக்கள் வழங்கப்படவுள்ளன.

இவ்விநியோகம் எதிர்வரும் 28 ஆம்திகதி உரும்பிராய் -கோப்பாய் வீதியில் தென்னை நாற்று உற்பத்தி செய்யப்பட்ட காணியில் வைத்து சம்பிரதாய பூர்வமாக அரசாங்க அதிபர் க.கணேஷினால் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

இதில் ஒரு பிரதேச செயலர் பிரிவுக்கு 450 நாற்றுக்கள் கிடைக்கக் கூடியதாக இருக்கும்.

இந் நாற்றுக்களை சங்கானை தென்னை வளர்ப்போர் சங்கம், நாவலர் வீதியில் அமைந்துள்ள தென்னைப் பயிர்ச்செய்கை சபையின் பிராந்திய அலுவலகம், நல்லூர் கமநல நிலையத்தில் அமைந்துள்ள தென்னை அபிவிருத்தி அலுவலர் அலுவலகம் ஆகியவற்றுடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்படுகின்றது. (ஓ)

## மாதாந்த கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

சர்வதேச இந்து மத குருமார் ஒன்றியம் நடாத்தும் மாதாந்த கருத்தரங்கு யாழ். ஆனைப்பந்தியிலுள்ள ஒன்றிய அலுவலகத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப 1.30 மணிக்கு ஒன்றியத்தின் தலைவர் சிவஸ்ரீ ப.மனோகரக் குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக் கருத்தரங்கில் சிவஸ்ரீ சபா.வாசுதேவக் குருக்கள் கருத்துரை வழங்கவுள்ளார். (ஓ)

## இரதோற்சவம்

திருநெல்வேலி அருள்மிகு ஸ்ரீ நீலாயதாஷி சமேத ஸ்ரீ காயாரோகணேஸ்வர சுவாமி ஆலயத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு வசந்த மண்டபப் பூஜை ஆரம்பமாகி, தியாகராஜா மூர்த்தி சகிதம் பஞ்சமூர்த்திகள் எழுந்தருளி பஞ்சரதங்க ளில் ஆரோகணித்து பஞ்சரத பவனி இடம்பெறும்.

நாளை திங்கட்கிழமை அதிகாலை ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத ஆனந்தநடராஜமூர்த்தி திருவுலா நடனக் காட்சியும், காலை 8 மணிக்கு வசந்தமமண்டப பூஜையும் நடைபெற்று தொடர்ந்து தீர்த்தோற்சவமும் மாலை கொடியிறக்கமும் இடம்பெறும். (ஓ)

## மஹோற்சவம்

கொக்குவில் கிழக்கு அருள்மிகு ஸ்ரீ காளிகாம்பாள் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் நாளை திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 15தினங்கள் நடைபெறும். இம்மாதம் 18ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் காளிகாம்பாள் தேரில் ஆரோகணித்து தேர்ப்பவனி இடம்பெறும். 19 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு தீர்த்தோற்சவமும் பிற்பகல் 2மணிக்கு மூலஸ்தான பூஜை ஆரம்பமாகி, திருவூஞ்சல் நடைபெற்று கொடியிறக்கம் இடம்பெறும்.

விஷேச நாட்கள் தவிர்ந்த ஏனைய நாட்களில் தினமும் முற்பகல் 10.30மணிக்கும், மாலை 5மணிக்கும் வசந்த மண்டப பூஜை இடம்பெற்று அம்பாள் வீதிஉலாவருவார். (ஓ)




திருநெல்வேலி முத்துத்தம்பி மகா வித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ்.கிளையின் தலைவர் பேராசிரியர் வீ.கே.கணேசலிங்கம் மைதானத்துக்கு அழைத்துவரப்படுவதையும், இடைவேளையின்போது இடம்பெற்ற மாணவிகளின் உடற்பயிற்சி நிகழ்வையும் படத்தில் காணலாம்.

# சினிமாத் துளிகள்

✡ ரஜினிகாந்த் நடித்துள்ள "குசேலன்" படத்தை 65 கோடி ரூபாய் கொடுத்து தமிழ் மற்றும் தெலுங்கு மொழிக்கான வெளியீடு உரிமையை வாங்கியிருக்கிறது பிரமீடு சாய்மீரா நிறுவனம்.

✡ வசந்தபாலன் இயக்கிவரும் "அங்காடி தெரு" படத்திற்கு ஒத்துழைப்பு தருவதில் தாமதம் காட்டி வருகிறாராம் தயாரிப்பாளர் ஷங்கர். (எல்லாம் கல்லூரி மற்றும் அறை எண்... கொடுத்த பாடமாம்).

✡ ஹிந்தி படங்களில் தொடர்ந்து நடிப்பதை விட தமிழ் மற்றும் தெலுங்குப் படத்தில் நடிப்பதில் தான் ஆர்வம் என்று பொய் சொல்லி வருகிறாராம் பொலிவுட் நடிகர் அமீரின் அந்தரங்க சிநேகிதியாகிவிட்ட நடிகை அசின்.

✡ தனது சம்பளத்தை அறுபது இலட்சத்திலிருந்து முப்பது இலட்சமாக குறைத்த போதிலும் வாய்ப்புகள் வரவில்லையே என்று கவலையில் மூழ்கியிருக்கிறாராம் நடிகை ஸ்ரேயா.

✡ குருவியை தொடர்ந்து உதயநிதி ஸ்டாலின் தயாரிக்கும் அடுத்த படத்தில் விஷால் நாயகனாக நடிக்கிறார். இந்தப் படத்தை இயக்கப்போவது இரண்டு தோல்விகள் படங்களை (கள்வனின் காதலி, மச்சக்காரன்) அளித்த தமிழ்வாணன்.

✡ சோனியா அகர்வாலை திருமணம் செய்து கொண்ட இயக்குநர் செல்வராகவன் தற்போது அவரை ஓரம்கட்ட ஆரம்பித்துவிட்டாராம். வேறொரு நடிகையுடன் இரகசியமாக குடும்பம் நடத்தி வருவதாக தகவல்.



✡ சரத்குமார் நடிக்கும் படம் ஒன்றில் ஸ்ரேயாவிற்கு அம்மாவாக நடிக்கிறார் சினேகா. திருமணம் ஆகாமலே அம்மா வேடம் ஏற்றிருக்கும் நடிகை சினேகாவின் துணிச்சலை யாராவது பாராட்டமலா இருப்பார்கள்.

✡ திருமணத்திற்குப் பிறகு நடிக்கவேமாட்டேன் என்ற திருமதி சூர்யா கல்வியறிவு அனைவருக்கும் அவசியம் என்பதை வலியுறுத்தும் அம்சம் கொண்ட படத்தில் நடித்துள்ளார்.

## மீண்டும் ஜோதிகா

# செல்வா இயக்கத்தில் விக்ரம்!



கந்தசாமியை முடித்து விட்டு செல்வராகவன் இயக்கப் போகும் புதிய படத்தில் நடிக்கவிருக்கிறார் விக்ரம். பொங்கலுக்கு வெளியாகியுள்ள விக்ரமின் பீமா ஹிட் பட வரிசையில் இணைந்துள்ளது. இதையடுத்து செய்தியாளர்களைச் சந்தித்தார் விக்ரம். பீமா படம் வெளியாவதற்காக தனது ரூ.1.5 கோடி சம்பளத்தையே விட்டுக் கொடுத்தவர் விக்ரம். பொங்கலுக்கு கண்டிப்பாக படம் வந்தே ஆகவேண்டும் என்று மும்முரமாக இருந்தார். அவரது எதிர்பார்ப்புப் படி படமும் வெளியாகி வெற்றியும் பெற்றுள்ளது. இந்தப் படத்துக்காக கடந்த இரண்டரை ஆண்டுகளில் 3 முக்கிய படங்களை இழந்துள்ளாராம் விக்ரம்.

தற்போது பீமா வெளியாகிவிட்ட சந்தோஷத்தில் இருக்கும் விக்ரம் செய்தியாளர்களிடம் ரிலாக்ஸ்டாக பேசினார். பீமா குறித்து அவர் பேசுகையில், பீமா எனது திரையுலக வாழக்கையில் முக்கியமான படம். படத்தைப் பார்த்த பலரும் பீமாவில் எனது கேரக்டர் குறித்து பாராட்டுத் தெரிவித்துள்ளனர். இந்தப் படத்தை முடிப்பதற்குள் எனது சம்பளம் உட்பட கிட்டத்தட்ட ரூ.11 கோடி வரை நான் இழந்துள்ளேன். மேலும் மன அமைதியும் பாதிக்கப்பட்டு, பெரும் மன உளைச்சலுக்கு ஆளாகிவிட்டேன். நான் உயரத்துக்கு வந்த பின்னர் முதல்முறையாக இவ்வளவு பெரிய துயரநிலையை சந்திக்கவேண்டியதாயிற்று. இதற்காக நான் பலமுறை வருத்தமடைந்தேன். இருப்பினும் நல்ல படம் ஒன்றை கொடுத்துள்ளோம் என்ற நிம்மதி எனக்குள்ளது. அதோடு மட்டுமல் லாமல் தயாரிப்பாளரை எப்படியாவது சிக்கலிலிருந்து காக்கவேண்டும் என்றும் நான் விரும்பினேன். பீமா ரூ.43 கோடிக்கு விற்பனை யாகியுள்ளது. தற்போது படம் அனைத்துப் பகுதிகளிலும் நன்றாக ஓடிக்கொண்டிருப்பதாக எனக்கு நல்ல செய்தி வந்துள்ளது. கடவுளுக்கு நன்றி. எனது ரசிகர்களும், தமிழக மக்களும், படத்தையும், என்னையும் காப்பாற்றிவிட்டனர். தயாரிப்பாளருக்கும் பெரும் நிம்மதியைக் கொடுத் துவிட்டனர் என்றார் விக்ரம். பீமா வெளியாகிவிட்ட நிம்மதியில் இருக்கும் விக்ரம் தற்போது கந்தசாமி படத்தில் தீவிர கவனம் செலுத்தி வருகிறார். கந்தசாமி குறித்து அவர் கூறுகையில், இந்தப் படம் பெரும் விருந்தாக அமையும். குறிப்பாக குழந்தைகள் இந்தப் படத்தை விரும்பிப் பார்ப்பார்கள். கந்தசாமி மிகப் பெரும் வெற்றிபெறும் என்ற நம்பிக்கை உள்ளது. எனது திரையுலக வாழ்க்கையில் மிகப் பெரிய வெற்றியாக அது அமையும். இயக்குநர் சுசி.கணேசனின் திறமையைப் பார்த்து நான் வியந்துபோயுள்ளேன். அவருடன் பணியாற்றும் வாய்ப்பு கிடைத்தது எனக்கு கிடைத்த அதிர்ஷ்டம் தான். நாட்டின் முன்னணி இயக்குநர்களில் ஒருவராக நிச்சயம் சுசி.கணேசன் வருவார் என்றார் விக்ரம். கந்தசாமிக்கு அடுத்து என்ன படம் என்று கேட்டதற்கு, ல்வராகவனுடன் இணைந்து ஒருபடம் செய்யவுள்ளேன். தற்போது நான் நடித்து வரும் கந்தசாமி மற்றும் செல்வராகவன் செய்துவரும் படம் ஆகியவற்றின் பணிகள் முடிந்ததும், புதிய படம் தொடர்பான பணிகளில் இருவரும் இறங்க திட்டமிட்டுள்ளோம் என்றார் விக்ரம்.

# "அழகர் மலை"

கரிமேடு கருவாயன், எங்க ஊரு பாட்டுக்காரன், பெரிய வீட்டுப் பண்ணைக்காரன், பாண்டிநாட்டு தங்கம், கும்பக்கரை தங்கையா, காதலுக்கு மரியாதை ஆகிய படங்களை தயாரித் தவர் சங்கிலி முருகன். இவர் தனது மீனாட்சி ஆர்ட்ஸ் சார்பில் ஒரு புதிய படம் தயாரிக்கிறார்.

## அண்ணன் – தம்பி பாசம்

இந்தப் படத்துக்கு, "அழகர் மலை" என்று பெயர் சூட்டப்பட்டு இருக்கிறது. ஆர். கே. கதாநாயகனாக நடிக்கிறார். "தாமிரபரணி" படத்தில் நடித்த பானு, கதாநாயகி யாக நடிக்கிறார். இவர்களுடன் நெப்போலியன், மணிவண் ணன், வடிவேல், லால், ஆகியோரும் நடிக்கிறார்கள். இளை யராஜா இசைமைக்கிறார். வாலி, மேத்தா, முத்துலிங்கம், பழனி பாரதி, நா.முத்துக்குமார், சினேகன் ஆகியோர் பாடல்களை எழுதியிருக்கிறார்கள். கார்த்திக்ராஜா ஒளிப்பதிவு செய்ய, கதை, திரைக்கதை வசனம் எழுதி எஸ்.பி.ராஜ்குமார் டைரக்ட் செய்கிறார்.

சங்கிலி முருகன். மேற்பார்வையில், கல்யாணி முருகன் தயாரிக்கிறார். படப்பிடிப்பு பழனியில் தொடங்கி, சுற்றுப்புறக் கிராமங்களில் 25 நாட்கள் நடைபெற்றன. ஒரே ஒரு பாடல் காட்சியில், சரவணன்- சுகன்யா ஜோடியாக ஆடினார்கள். தொடர்ந்து படப்பிடிப்பு நடைபெறுகிறது. அண்ணன் –தம்பி பாசத்தை அடிப்படையாகக் கொண்ட குடும்பப் படம் இது.

# 'சிங்கம்'

"குருவி"யை தொடர்ந்து விஜய் நடிக்கும் புதிய படத்திற்கு "சிங்கம்" எனப் பெயரிடப்பட்டுள்ளது.

உதயநிதி ஸ்டாலின் தயாரித்துள்ள "குருவி" படத்தை முதலில் தயாரிப்பதாக இருந்தது. லண்டன் கருணாஸின் ஐங்கரன் இண்டர்நஷனல் நிறுவனம். அதற்கு முன்பாக தனது கம்பனிக்கு நடித்துக் கொடுக்கும்படி உதயநிதி கேட்டுக் கொண்டதால் லண்டன் கருணாஸுக்கு தந்த கால்ஷீட்டை உதயநிதிக்கு கொடுத்தார் விஜய்.

இப்போது "குருவி" படத்தின் வேலைகள் முடிந்து ரிலீசுக்கு காத்திருப்பதால் லண்டன் கருணாஸுக்கு கால்ஷீட்டுக்களை ஒதுக்கியுள்ளார் விஜய். பிரபுதேவா இயக்கவுள்ள இப் படத்திற்கு "சிங்கம்" எனப் பெயரிடப்பட்டுள்ளது.

"போக்கிரி", "குருவி" படங்களில் நயன்தாராவுக்கு கிடைக்கவிருந்த வாய்ப்பு த்ரிஷாவுக்கு போனதால் இம்முறை நயன்தாரா வுக்கு தனக்கு ஜோடி சேரும் வாய்ப்பை அளித்துள்ளார் விஜய். விஜய்யின் கமர்ஷியல் பார்முலாதான் 'சிங்கம்' படத்தின் கதையாம். இந்தப் படம் முடிந்ததும் ஏவி.எம். நிறுவனம் சார்பில் எம்.பாலசுப்பிரமணியம் தயாரிக்கும் படத்தில் நடிக்கும் விஜய் மீண்டும் உதயநிதிக்காக ஒரு படத்தில் நடிக்கவுள்ளாராம். ஏற்கனவே எஸ்.ஜே.சூர்யா இயக்கத்தில் விஜய் நடிப்பதாக இருந்த படத்திற்கு "புலி" எனப் பெயர் வைத்து பின்னர் கைவிடப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# விஜய் –விக்ரம் இணைவார்களா?



'சென்னை 28' படத்துக்கு பிறகு டைரக்டர் வெங்கட் பிரபு இயக்கி வரும் படம் சரோஜா. இந்த படத்தை தொடர்ந்து ஒரு படம் எடுப்பதற்காக 5 கதைகளை வைத்திருக்கிறாராம்.

இரண்டு முன்னணி நடிகர்களை வைத்து புதியபடத்தை இயக்க நினைக்கும் வெங்கட், இதற்காக விஜய் மற்றும் விக்ரமிடம் கால்ஷீட் கேட்டுள்ளார். இருவரும் கதை தங்களுக்குப் பொருத்தமாக இருந்தால் நடிக்கிறோம் என்று உறுதியளித்திருக்கிறார்களாம்.

கதையை தயாராக வைத்திருக்கும் வெங்கட் பிரபு கதையை ஹீரோக்களிடம் சொல்லுவதற்காக நேரம் கேட்டுள்ளார். அவர்களும் கதை கேட்க சம்மதம் தெரிவித்துள்ளனர். இரண்டு முன்னணிகளும் இணையுமா? என்பது விரைவில் தெரிய வரும்.

# காதல் எதுவரை 2020

புறாவைத் தூதுவிட்ட காதல், தோழியை தூதுவிட்டகாதல், கடிதத்தை தூதுவிட்ட காதல், எஸ்.எம்.எஸ்., இமெயில் மூலம் வளர்ந்த காதல் என வெண்திரையில் காதலை பல கோணங்களில் காட்டிவிட்டார்கள். ஒரு மகாமகம் கழித்து 2020 ஆம் ஆண்டில் காதல் எப்படி இருக்கும்? என்பதை சித்தரிக்கும் வகையில் ஒரு புதிய படம் தயாராகிறது.

இந்தப் படத்துக்கு "காதல் எதுவரை 2020" என்று பெயர் சூட்டப்பட்டு இருக்கிறது. இரண்டு கதாநாயகர்கள் ஒரு கதாநாயகியை சுற்றிப் பின்னப்பட்ட கதை இது. 2020 ஆம் ஆண்டின் விஞ்ஞான வளர்ச்சியை மனதில் வைத்துக் கொண்டு படமாக்குகிறார்கள்.

புதுமுகங்கள் தரண், தீனா ஆகிய இருவரும் கதாநாயகர்களாக நடிக்க அஸ்வதா கதாநாயகியாக நடிக்கிறார். இவர்களுடன் நிழல்கள் ரவி, ராஜீவ், ஆனந்தராஜ், முத்துக்காளை, வையாபுரி, குமரிமுத்து, மீரா கிருஷ்ணன், கலைராணி ஆகியோரும் நடிக்கிறார்கள்.

கதை, திரைக்கதை, வசனம் எழுதி க.ச.தண்டாயுதன் டைரக்ட் செய்கிறார். ஜே.பி.கிரியேஷன்ஸ் சார்பில் எ.சுரேஷ் தயாரிக்கிறார். இணை தயாரிப்பு சேகர்சிங்.

இந்தப் படத்திற்காக கானா உலகநாதன் ஒரு பாடலைப் பாடி நடிக்கிறார். இசையமைப்பாளர் தேவா. ஒரு பாடலை பாடியிருக்கிறார்.

# தசாவதாரம் கதை இதுதான்



நடிகர் கமலஹாசன் 10 வித்தியாசமான வேடங்களில் தோன்றும் படம் தசாவதாரம். இந்தப் படத்தின் சில காட்சிகளை மட்டுமே பார்த்த பலரும் ஆஹா ஓஹோ என்று பாராட்டினார்கள்.

டிரைலரை பார்த்த பின்னர் பாராட்டுக்களின் எண்ணிக்கை உயர்ந்தது. ஓடியோ வெளியீட்டு விழா வில் பேசிய கமலஹாசன் இத்தனை நாட்கள் தசாவதாரம் பற்றிய செய்திகளை வெளியிடாமல் இருந்தோம். இனி தசாவதாரம் படத்தை பற்றிய செய்திகள் வெளிவரும் என்றார். இந்நிலையில் தசாவதாரம் குறித்த தகவல்கள் வெளியாகி கோலிவூட்டில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன. படத்தின் கதை 14ஆம் நூற் றாண்டு கதை என்பதுதான் அந்தத் தகவல். 14ஆம் நூற்றாண் டில் ஆரம்பமாகும் படத்தில் நாராயணன், சிவன் இருவரையும் வழிபடும் பக்தர்களுக்கு இடையே பிரச்சினை ஏற்படுகிறது. அந்தணரான கமலஹாசனிடம் சிவனை வணங்கச் சொல்லி வற்புறுத்துகிறான் மன்னன்.

முடியாது என்று மறுக்கும் அவரை கைகால்களை கட்டி கடலில் எறிகிறான். அப்போது ஆரம்பமாகும் பிரச்சினை ஒவ்வொரு பிறவியாகத் தொடருகிறது. கிளைமாக்ஸ் மட்டும் படம் ரிலீஸாகும் வரை இரகசியமாக இருக்கும் என்று தசாவதாரம் குழுவினர் தெரிவிக்கின்றார்கள்.

# நடிகர் அஜித்தின் வீரடு சாய்பாபா பக்தி



மின்னல் வேகத்தில் முன்னேறிக் கொண்டிருந்த அஜித்துக்கு ஒரு கட்டத்தில் பலத்த அடி விழுந்தது. அவர் நடித்த சில படங்கள் எதிர்பார்த்த அளவுக்கு வெற்றி பெறவில்லை.

இந்நிலையில் அஜித் நடித்த ரீமேக் படமான பில்லா சக்கை போடுபோட்டது. இதற்குக் காரணம் ஆன்மீக வழிபாடுதான் என்று நம்புகிறார் அஜித். கடந்த வாரம் சென்னை கிழக்குக் கடற்கரை சாலையில் உள்ள ஷீரடி சாய்பாபா கோயிலுக்குச் சென்ற அஜித் சுமார் ஒரு மணி நேரத்துக்கும் மேலாக அங்கேயே இருந்தார்.

அவர் சாய்பாபாவை தரிசிக்கச் சென்ற நாளில்தான் சிவாஜி புரடெக்ஷனில் நடிப்பதற்காக அட்வான்ஸ் தொகை வாங்கினாராம்.

# ரஜினியுடன் நடிக்க மறுத்த 5 படங்கள் –ஐஸ்வர்யாராய்



மணிரத்தினத்தின் "இருவர்" படம் மூலம் தமிழில் அறிமுகமான ஐஸ்வர்யாராய் "கண்டுகொண்டேன் கண்டு கொண்டேன்", "ஜீன்ஸ்" படங்களிலும் நடித்தார். கடைசியாக அவரது "குரு" படம் இந்தி, தமிழில் ரிலீஸானது. தற்போது ரோபோவில் ரஜினி ஜோடியாக நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார். ராஜினி யுடன் ஏற்கனவே 5 படங்களில் நடிக்க வாய்ப்பு வந்தும் மறுத்துவிட்டதாக புதுத் தகவலை வெளியிட்டுள்ளார்.

ஐஸ்வர்யாராய் இதுகுறித்து அளித்த பேட்டி வருமாறு:–

ரஜினி ஜோடியாக ரோபோவில் நடிப்பது மகிழ்ச்சியளிக்கிறது. ரஜினி ஏற்கனவே என்னைப் பல முறை அணுகி நடிக்க அழைத்தார். அவரது கடந்த 5 படங்களில் என்னை கதாநாயகியாக நடிக்க வைக்க விரும்பி அழைத்தார். ஆனால் நான் மறுத்து விட்டேன். அதை அவர் தப்பாக எடுத்துக்கொள்ளவில்லை. இதனால் அவர் மீது எனக்கு அளவு கடந்த மரியாதை ஏற்பட்டது. அவரது பக்குவப்பட்ட மனதுக்கு இதுவே சாட்சியாகும். எனவேதான் இப்போது ரோபோவில் நடிக்கக் கேட்ட போது உடனே ஒப்புக்கொண்டேன். ரோபோ அறிவியல் படமா என்று என்னால் சொல்ல முடியாது.

ஆனால், இப்படத்தில் இது வரை பார்க்காத நவீன தொழில்நுட்பங்கள் இருக்கும். திரையுலகின் இன்னொரு பரிணாமத்தை இப் படம் வெளிப்படுத்தும். என் கேரக்டர் வழக்கமானதை விட வித்தியாசமாக இருக்கும். ரஜினியுடன் நடிக்க வேண்டும் என்று ரொம்ப நாள் ஆசை இருந்தது. அது இப்படத்தில் நிறைவேறுகிறது. ரஜினி ஒரு அதிசய மனிதர். அவருடன் நடித்தவர்கள் அவரைப்பற்றி பெருமையாக பல விஷயங்கள் சொல்வதைக் கேட்டு இருக்கிறேன். அனுபவத்தை நானும் பெறப்போகிறேன்.

# இலங்கையே தெற்காசிய பிராந்தியத்தின் இறுதி நோயாளி

இலங்கையே தெற்காசியப் பிராந்தியத்தின் இறுதி நோயாளி என்று பிரித்தானியாவிலிருந்து வெளியாகும் "த கார்டியன்" ஏடு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்த ஏட்டில் இடம்பெற்றுள்ள கட்டுரையின் தமிழ் வடிவம் வருமாறு,

தெற்காசிப் பிராந்திய நாடுகளுக்கு பாராட்டுத்தெரிவிப்பதற்கு இன்னும் சில காலம் காத்திருக்க வேண்டியுள்ளது.

சிங்கள தமிழ்ப்புத்தாண்டுச் செய்தியில் இலங்கைப் படைத்தளபதி சரத் பொன்சேகா இந்த ஆண்டு இறுதிக்குள் தமிழீழ விடுதலைப் புலிகளை ஒழித்துக்கட்ட முடியும் என சூளுரைத்திருக்கின்றார்.

**கிழக்கில் விடுதலைப்புலிகள் அடைந்த பின்னடைவை அடிப்படையாகக்கொண்டே அரசாங்கம் தனது இராணுவ முன் நகர்வுகளை மேற்கொள்கின்றது.**

கடந்த 22ஆண்டுகாலமாக தொடர்ந்து வந்த தமிழீழ விடுதலைப்புலிகளின் ஆயுதப் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வந்து பெரும்பான்மை சிங்கள மக்களுக்கு அமைதியைப் பெற்றுக்கொடுக்க முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தெற்காசியப் பிராந்தியத்தின் இறுதி நோயாளியாக இலங்கை தற்போது காணப்படுகின்றது.

புத்திசாதுரியமான இணக்கப்பாடுகளின் காரணமாக பிராந்தியத்தின் மற்றுமொரு நாட்டில் நீண்டகாலமாக நிலவிவந்த மக்கள் போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. நேபாள மக்கள் போர் 18 மாதங்களுக்கு முன்னர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது.

பாகிஸ்தானில் ஒரு தசாப்த காலமாக நிலவிவந்த இராணுவ ஆட்சி கவிழ்க்கப்பட்டு ஜனநாயக ஆட்சி நிலை நிறுத்தப்பட்டுள்ளது.

இந்தப் புதிய அரசாங்கம் எல்லைப்புற மாவட்டங்களைச் சேர்ந்த கிளர்ச்சியாளர்களுடன் பேச்சுவார்த்தை நடாத்த ஆயத்தமாகி வருகின்றது.

இலங்கையின் நிலைமை பாகிஸ்தான் மற்றும் நேபாள நிலைமையிலிருந்து முற்றிலும் மாறுப்பட்டு காணப்படுகின்றது.

பிரித்தானிய காலனித்துவ ஆட்சியிலிருந்து சுதந்திரம் பெற்றது முதல் தொடர்ச்சியாக நாடாளுமன்ற ஆட்சி அதிகாரமே இலங்கையில் நிலவி வருகின்றது.

கல்வி சுகாதார வசதிகள் மற்றும் பொருளாதார நிலையிலும் இலங்கைப் பிராந்தியம் ஓரளவு சாதகமான நிலையிலேயே காணப்படுகின்றது.

எனினும் இன, மத மற்றும் பிரதேச ரீதியான மக்களின் நியாயமான கோரிக்கைகள் ஜனநாயக ரீதியில் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசியல் வாதிகளினால் மறுதலிக்கப்பட்டது.

இவ்வாறு நீண்ட காலமாக உரிமைகள் மறுக்கப்பட்டதன் காரணமாக மன உலைச்சலுக்கு உள்ளான தமிழ் மக்கள் ஆயுதப் போராட்ட வழியைத் தேர்ந்தெடுத்தனர்.

ஒரே நாட்டிற்குள் நியாயமான அதிகாரங்கள் வழங்கப்படாது என்ற நோக்கில் பலர் ஆயுதப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தனர்.

விடுதலைப்புலிகளை வெற்றிகொள்ள முடியும் என்ற தற்போதைய அரசாங்கத்தின் நிலைப்பாடு விடுதலைப்புலிகளுக்கு ஒன்றும் புதிதல்ல.

ஏற்கனவே ஆட்சி செய்த பல அரசாங்கங்கள் விடுதலைப்புலிகளை தோற்கடிப்பதாக சூளுரைத்த போதிலும் இறுதியில் அவை தோல்வி முயற்சிகளாகவே முடிபடைந்தன.

போர் காரணமாக 70 ஆயிரத்துக்கும் அதிகமான உயிர்கள் பலியாகியுள்ளன. இலங்கை படைத்தளபதி சரத் பொன்சேகாவின் இந்த சூளுரைக்குப் பின்னணியில் பாரதூரமான விளைவுகள் ஏற்படக்கூடும் என சுயாதீன அவதானிப்பாளர்களின் எச்சரிக்கை குறித்து ஆச்சரியப்படுவதற்கில்லை.

**அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியத்தின் விமர்சன அலைகளை புறந்தள்விவிட்டு வேறு நாடுகளுடன் புதிய பரிமாணங்களில் உறவுகளை ஏற்படுத்த ஜனாதிபதி மஹிந்த முயற்சியினை மேற்கொண்டுள்ளார்.**

போர் நிறுத்த உடன்படிக்கையை இரத்துச் செய்வதாக சரத் பொன்சேகாவின் அரசியல் ஆசான் மஹிந்த அறிவித்த போது இந்தியா மற்றும் மேற்குலக நாடுகள் தமது அதிர்ச்சியை வெளியிட்டிருந்தன.

கிழக்கில் விடுதலைப்புலிகள் அடைந்த பின்னடைவை அடிப்படையாகக் கொண்டே அரசாங்கம் தனது இராணுவ முன்நகர்வுகளை மேற்கொள்கின்றது.

அரசாங்கம் கருணாவுக்கு ஆயுதங்கள் மற்றும் நிதி உதவிகளை வழங்கி அதன் மூலம் தமது பழைய சகாக்களை அழிக்கப் பயன்படுத்திக்கொண்டது.

எனினும் வடக்குப் பிரதேசமே விடுதலைப் புலிகளின் பலமான கோட்டையாக காணப்படுகின்றது. கடந்த ஜனவரி மாதம் முதல் வடக்கில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ முன்நகர்வுகளில் பாரிய இழப்புக்களுடன் கூடிய சிறிய முன்னேற்றமே எட்டப்பட்டுள்ளது.

கடந்த வார இறுதியில் முகமாலையில் இராணுவத்தினர் பாரிய இழப்புக்களை எதிர்நோக்கினர். படையினர் சிகிச்சை பெறும் மருத்துவமனைகளுக்குச் செல்ல ஊடகவியலாளர்களுக்கு தடை விதிக்கப்பட்டது.

47 படையினர் இந்த மோதல்களின் போது கொல்லப்பட்டதாக அரசாங்கத்தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

இரண்டு தரப்பினரும் தமது இழப்புக்களை குறைத்து எதிரணியின் இழப்புக்களை மிகைப்படுத்திக் காட்டுவதில் அதிக அக்கறை காட்டுகின்றனர்.

எனினும் சுயாதீன கண்காணிப்பாளர்களின் கருத்துப்படி ஆயிரத்துக்கும் அதிகமானோர் இரண்டு தரப்புக்களிலும் காயமடைந்தோ அல்லது உயிரிழந்தோ இருக்

## 'த கார்டியன் ஏடு' விபரிப்பு

கலாம் எனத் தெரிவிக்கின்றனர்.

500 மீற்றர் முன்னேறியுள்ளதாக இராணுவத் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. எனினும் தமிழீழ விடுதலைப்புலிகளின் முன்னரங்கப் பகுதிகளை ஊடறுப்பது என்பது அவ்வளவு சுலபமான காரியமல்ல என முன்னாள் இராணுவ ஜெனரல் ஜெரி டி சில்வா உள்நாட்டு ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்துள்ளார்.

கடத்தல்கள், காணாமல் போதல்களுடன் விடுதலைப்புலி ஆதரவாளர்களுக்கு தொடர்பு இருப்பதாக இராணுவத் தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

**பெரும்பான்மை சிங்கள எதிர்க் கட்சிகளுக்கு இடையிலான பிளவு காரணமாக போர்நிறுத்த உடன் படிக்கையை அமுல்படுத்துவது தொடர்பாகவோ அல்லது பேச்சுவார்த்தையை முன்னெடுப்பது தொடர்பாக ஜனாதிபதி மஹிந்தவுக்கு அழுத்தம்கொடுக்கமுடியாத நிலைமை காணப்படுகின்றது.**

கடத்தல்கள், காணாமல் போதல்கள் தொடர்பான தகவல்களை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க உள்ளதாக தெரிவித்த சில மணித்தியாலயங்களில் நாடாளுமன்ற உறுப்பினர் மகேஸ்வரன் இந்து ஆலயம் ஒன்றில் புத்தாண்டு நாள் அன்று படுகொலை செய்யப்பட்டார்.

இலங்கையின் ஊடக சுதந்திரம் நசுக்கப்படுவதாக உள்நாட்டு மனித உரிமை அமைப்புக்கள் தெரிவிக்கின்றன.

மேற்குலக நாடுகள் மற்றும் வழமையாக இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள் இராணுவ நடவடிக்கைகளின் மூலம் தீர்வைப் பெற்றுக் கொள்ள முடியாது என வலியுறுத்தி வருகின்றன.

அமெரிக்க அரசாங்கம் அண்மையில் இலங்கைக்கு வழங்கும் இராணுவ உதவிகளை நிறுத்திக் கொண்டது.

இலங்கைக்கான வர்த்தக முன்னுரிமை சலுகையை வழங்குவதா இல்லையா என்பது குறித்து ஐரோப்பிய ஒன்றியம் இன்னமும் இறுதித் தீர்மானம் எடுக்கவில்லை.

இந்த நாடுகளின் விமர்சன அலைகளை புறந்தள்ளி விட்டு வேறு நாடுகளுடன் புதிய பரிமாணங்களில் உறவுகளை ஏற்படுத்த ஜனாதிபதி மஹிந்த முயற்சிகளை மேற்கொண்டுள்ளார்.

அண்மையில் ஈரானிய ஜனாதிபதி இலங்கைப் பயணம் மற்றும் ஜனாதிபதி மஹிந்தவின் சீனப் பயணம் போன்றவற்றை இதற்கு மேற்கோள் காட்டலாம்.

இந்தப் பயணங்கள் மூலம் இலங்கைக்கு பல புதிய நிதியுதவிகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைகள் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வதனை விட போராட்டத்தை நடத்துவதனையே சுலபமாக கருதுகின்றன.

இலங்கை அரசாங்கம் தமது சிங்களப் பெரும்பான்மை வாக்காளர்களுக்கு எந்தவித சலுகைகளையும் வழங்கியதாகத் தெரியவில்லை.

பணவீக்க அளவு 28 விழுக்காட்டை எட்டியுள்ளது. அரிசி மற்றும் தேங்காயின் விலை மிகவும் அதிகரித்துள்ளது.

பெரும்பான்மை சிங்கள எதிர்க்கட்சிகளுக்கு இடையிலான பிளவு காரணமாக போர் நிறுத்த உடன் படிக்கையை அமுல்படுத்துவது தொடர்பாகவோ அல்லது பேச்சுவார்த்தையை முன்னெடுப்பது தொடர்பாக ஜனாதிபதி மஹிந்தவுக்கு அழுத்தம் கொடுக்க முடியாத நிலைமை காணப்படுகின்றது.

போரை இந்த ஆண்டின் இறுதிக்குள் முடிவுக்குக் கொண்டுவர முடியும் என்று இராணுவத் தளபதி சரத்பொன்சேகா தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளைத் தோற்கடிப்பதாக பல தடவைகள் இவ்வாறு எதிர்வு கூறப்பட்டது.

எனினும், இந்தக் கூற்றின் மூலம் இந்த நிலைமை இன்னும் பல காலங்களுக்கு நீடிக்கும் என்பதே தெளிவாகின்றது என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அமெரிக்க அதிபர் புஷ்ஷின் செல்வாக்கு சரிந்துள்ளது

## சி.என்.என் கருத்துக்கணிப்பு

(அமெரிக்கா)

அமெரிக்கா ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷின் செல்வாக்கு சரிந்துள்ளதாகவும் புஷ் சிறப்பாக செயற்படவில்லையெனவும் 71 சதவீதமான அமெரிக்கர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

ஜனாதிபதியின் செயற்பாடு குறித்து சி.என்.என் செய்தி நிறுவனம் அந்த நாட்டு மக்களிடம் அண்மையில் கருத்துக் கணிப்பு நடத்தியது.

இதில் 29 சதவீதமானோர் புஷ்ஷுக்கு ஆதரவாக வாக்களித்துள்ளடன் 71 சதவீதமானோர் புஷ்ஷின் செயற்பாடு குறித்து அதிருப்தி தெரிவித்துள்ளார்.

இதற்கு முன்னர் நடத்தப்பட்ட கருத்துக் கணிப்புக்களில் முன்னாள் ஜனாதிபதிகள் ஹரி ட்ரூமேன், ரிச்சர்ட் நிக்ஸன் ஆகியோர் அவர்களது ஆட்சிக்காலத்தில் மக்கள் செல்வாக்கை இழந்த அதிபர்களாக கருதப்பட்ட நிலையில் ஜனாதிபதி புஷ் அவர்களை விட மிகவும் பின் தங்கிய நிலையிலுள்ளாரென சி.என்.என் அரசியல் விமர்சகர் பில் தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஈராக் போர் குறித்து கேட்ட போது 30 சதவீதமானோர் அந்த போர்



நியாயமானதெனவும் 70 சதவீதமானோர் அந்தப் போர் தேவையற்றது எனவும் தெரிவித்துள்ளார்.

பொருளாதார கொள்கையிலும் புஷ் கோட்டை விட்டுவிட்டதாக பெரும்பான்மை மக்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

இந்த கருத்துக் கணிப்பு அமெரிக்க ஜனாதிபதி தேர்தலிலும் எதிரொலிக்கக்கூடும் என்பதால் குடியரசு கட்சியினர் கலக்கமடைந்துள்ளனர். (5)

# சூடான் விமான விபத்தில் அமைச்சர் உட்பட 22பேர் பலி

தெற்கு சூடானில் நேற்று காலை ஏற்பட்ட விமான விபத்தில் அந்நாட்டுப் பாதுகாப்பு அமைச்சர் மற்றும் இராணுவ உயரதிகாரிகள் உட்பட 22 பேர் உடல் சிதறி பரிதாப மாக உயிரிழந்தனர்.

தெற்கு சூடான் தலைநகர் ஜுபாவில் இருந்து 375 கிலோ மீற்றர் தெலைவில் இந்த விபத்து ஏற்பட்டதாகவும், விமானத்தில் இருந்த அனைவரும் உயிரிழந்து விட்டதாகவும் சூடான் அதிபர் சல்வா கிர் தெரிவித்துள்ளார்.

அந்த பயணத்தில் பாதுகாப்பு அமைச்சர் டோமினிக் டிம் டெங் மற்றும் உயர் இராணுவ அதிகாரிகள் பயணம்செய்தனர். சூடானில் உள்ள ஐ.நா அமைப்பு, விபத்து நடந்த இடத்திற்கு ஹெலிகொப்டர் ஒன்றை அனுப்பி வைத்துள்தாகவும்,



அந்த ஹெலி கொப்டரில் சென்றவர்கள் விமானத்தில் இருந்த அனைவரும் உயிரிழந்ததை உறுதி செய்திருப்பதாகவும் சூடான் அதிபர் தெரிவித்தார். (5)

# விண்வெளி சுற்றுலாப் பயணத்துக்காக ரஷ்ய விண்கலம் தயாராகின்றது

(மொஸ்கோ)

விண்வெளிக்கு இப்போது விண்வெளி வீரர்கள் தான் அனுப்பப்பட்டு வருகிறார்கள். ரஷியா மட்டும் பணம் வாங்கிக் கொண்டு ஒவ்வொரு முறையும் ஒரு சுற்றுலா பயணியை விண்வெளிக்கு அனுப்பி வருகிறது. இந்த நிலையில் சுற்றுலாப் பயணிகளை மட்டும் விண்வெளிக்கு அனுப்பும் திட்டம் விரைவில் நடைமுறைக்கு வரும் என்று ஒரு டிரவல் கம்பனி எதிர்பார்க்கிறது

இதனால் சுற்றுலாப் பயணிகளை அனுப்புவதற்கு வசதியாக விண்கலம் ஒன்றை தயாரிப்பதற்காக வடிவமைப்புக்களை உருவாக்குவதற்கான ஒடர்களை பரீட்சார்த்த இயந்திரங்கள் தயாரிக்கும் கம்பனிக்கு கொடுத்துள்ளது.

இந்த விண்கலம் ரொக்கெட்டில் இருந்து பிரிந்த பிறகு அது 100கி.மீ தூரம் பறந்து செல்லும்.

அப்போது பயணிகள் புவியீர்ப்பு விசை இல்லாத நிலையை உணர முடியும். இந்த விண்கலத்தில் 2 விமானிகளும், 14 பயணிகளும் பயணம் செய்யும் விதத்தில் இது வடிவமைக்கப்பட்டுள்ளது. (5)

# வோர்ன், கங்குலிக்கு அபராதம் !
# ஐ.பி.எல். அதிரடி நடவடிக்கை

சிமித் பிடி தொடர்பாக சர்ச்சை கிளப்பிய கங்குலி, ஷேன் வோர்ன் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இவர்களது போட்டிக்கான சம்பளத்தில் இருந்து 10 சதவீதம் அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது. நடுவர் பிரதாப் குமாரும் ஒரு போட்டிக்கு



இடைநிறுத்தப்பட்டுள்ளார்.

ஜ.பி.எல் இருபது -20 கிரிக்கெட் தொடர் பரபரப்பாக நடக்கிறது. ஜெய்ப்பூரில் நடந்த 18வது லீக் போட்டியில் வோர்ன் தலைமையிலான ராஜஸ்தான் றோயல்ஸ் அணி, கங்குலியின் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியை வீழ்த்தியது.

### பிடி சர்ச்சை

இப்போட்டியின் போது யூசுப் பதான் வீசிய 13வது ஓவரில் கங்குலி சிக்சர் அடிக்க பார்த்தார். அப்போது எல்லைக் கோடு அருகே இருந்த சிமித் ஓடி வந்து-படுத்து அருமையாக் பிடி எடுத்தார். ஆனால் பந்து தரையில் பட்டதாக கூறிய கங்குலி வெளியேற மறுத்தார். ஸ்கொயர் லெக் நடுவர் ரூடி கேஸ்டன் சரியாக பிடி செய்யப்பட்டதாக கூறினார்.

உடனே இன்னொரு நடுவரான இந்தியாவை சேர்ந்த பிரதாப் குமாரை அணுகினார். அவரிடம் மூன்றாவது நடுவரிடம் கேட்கும் படி வலியுறுத்தினார். மூன்றாவது நடுவர் அசாத் ராப், அவுட் இல்லை என அறிவித்தார். இப்பிரச்சினையின் போது அரை சதம் எட்டிய கங்குலி அதிக நேரம் நீடிக்கவில்லை. வோர்ன் வீசிய அடுத்த ஓவரில் 51 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தார்.

### அதிரடி நடவடிக்கை

இந்தச் சூழலில் பிரச்சினை பற்றி ஜ.பி.எல் போட்டி நடுவர் பரூக் இன்ஜினியர் ஆய்வு செய்தார். மூன்றாவது நடுவரிடம் கேட்கும்படி வலியுறுத்துவது ஜ.சி.சி நடத்தை விதி முறைப்படி முதல் நிலை குற்றம். இதற்காக கங்குலிக்கு போட்டிக்கான சம்பளத்தில் இருந்து 10 சதவீதம் அபராதம் விதித்தார்.

களத்தில் நடந்த சம்பவம் தொடர்பாக வெளிப்படையாக விமர்சிப்பது, கருத்து தெரிவிப்பது பிரிவு 1.7இன் கீழ் குற்றம். இதன்படி வோர்னுக்கும் 10சதவீதம் அபராதம் விதித்தார். இதே-போல மூன்றாவது நடுவரிடம் கேட்க வேண்டிய அவசியம் நடுவர் பிரதாப் குமாருக்கு ஏற்படவில்லை.

இதனை மீறி செயல்பட்டதற்காக ஒரு போட்டிக்கு இடைநிறுத்தப்பட்டார். இது குறித்து ஜ.பி.எல் தலைவர் லலித் மோடி கூறுகையில், எல்லை மீறிய வோர்ன், கங்குலியை போட்டி நடுவர் கடுமையாக எச்சரித்துள்ளார். அப ராதமும் விதித்து உரிய நடவடிக்கை எடுத் துள்ளார் என்றார்.

### தொடரும் சர்ச்சை

சிறிசாந்த் விவகாரத்தில் ஹர்பஜனுக்கு தடை மற்றும் அபராதம் விதிக்கப்பட்டது. இப்பிரச்சினையில் சிறிசாந்தை விமர்சித்த நடுவர் அமிஷ் சகேபா இரண்டு போட்டிகளுக்கு இடைநிறுத்தப்பட்டுள்ளார். தற்போது கங்குலி, வோர்ன் சிக்கியுள்ளனர். தவிர நடுவர் பிரதாப் குமாரும் இடைநிறுத்தப்பட்டுள்ளார்.

### பாக். நடுவர் காரணம்?

மூன்றாவது நடுவராக பாகிஸ்தானை சேர்ந்த அசாத் ராப் பணியாற்றினார். சர்ச்சைக்குரிய சிமித் பிடி தொடர்பாக பல முறை ரீப்ளே பார்த்தார். ஆனாலும் ரீ.வி காட்சிகளில் இருந்து இவரால் எதையும் உறுதி செய்ய முடியவில்லை.

இறுதியில் சந்தேகத்தின் பலனை துடுப்பாட்ட வீரர் கங்குலிக்கு அளித்து, ஆட்டம் இழப்பு இல்லை என அறிவித்தார். கூர்ந்து கவனித்தால் சிமித் சரியாக பிடியெடுத்தது நன்கு தெரிந்தது.

(5)



## அக்தர் மீது வழக்கு



ஐ.பி.எல் தொடரில் விளையாட அனுமதிப்பதற்கு பி.சி.பி தலைவர் நஷிம் அஷ்ரப் லஞ்சம் கேட்டதாக கூறிய அக்தரிடம் ரூ.22 கோடி கேட்டு மான நஷ்ட வழக்கு தொடரப் பட்டுள்ளது. பாகிஸ்தான் அணியின் சர்ச் சைக்குரிய பந்து வீச்சாளர் சொயிப் அக்தர். இவருக்கு 5 ஆண்டுகள் போட்டிகளில் பங் கேற்க தடை விதிக்கப்பட்டது.

இந்நிலையில் அக்தர் அடுத்த சர்ச்சையில் சிக்கியுள்ளார். பி.சி.பி தலைவர் நஷிம் அஷ்ரப், ஐ.பி.எல் தொடரில் பங்கேற்க வீரர்களிடம் பணம் கேட்டதாக சமீபத்தில் ரீ.வி ஒன்றில் தெரிவித்திருந்தார்.

இதையடுத்து தற்போது அவரிடம் ரூ.22 கோடி மான நஷ்ட ஈடு கேட்டு அஷ்ரப், லாகூர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்துள்ளார்.

(5)

## சென்னை-ராஜஸ்தான் இன்று மோதல்

(சென்னை)

தோனி தலைமையிலான சுப்பர் கிங்ஸ் அணி, 5ஆட்டத்தில் விளையாடி 4ல் வெற்றி பெற்றது. ஒரு ஆட்டத்தில் தோற்றது. கிங்ஸ் லெவின் பஞ்சாப், மும்பை இந்தியன்ஸ், கொல் கத்தா நைட்ரைடர்ஸ், பெங்களூர் ரோயல் சலஞ்சர்ஸ் அணிகளை வென்று இருந்தது.

டெல்லி அணியிடம் தோல்வியடைந்தது. 6ஆவது ஆட்டத்தில் வோர்ன் தலைமையிலான ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியை இன்று எதிர்கொள்கிறது. இரவு 8 மணிக்கு இந்தப் போட்டி நடக்கிறது.

ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி, பலம் வாய்ந்தது. இதனால் வெற்றி பெற சென்னை கடுமையாக போராட வேண்டும். ராஜஸ்தான் ரோயல்ஸ் 5ஆட்டத்தில் 4இல் வெற்றி பெற்றது. ஒரு ஆட்டத்தில் தோற்றது.

அந்த அணி பஞ்சாப், ஐதராபாத், பெங்களூர், கொல்கத்தா அணிகளை வென்று இருந்தது. டெல்லியிடம் தோல்வியடைந்தது.

ஹைடன், ஜேக்கப் ஓரம், மைக்கல் ஹசி ஆகியோர் இல்லாததால் சென்னை அணி பலவீனமாகக் காணப்படுகின்றது. பிளமிங்கின் ஆட்டம் எதிர்பார்த்த அளவுக்கு இல்லை.

தொடக்க வீரர் பார்த்தீவ் பட்டேல் அதிரடியாக ஆடவில்லை. இதனால் சுரேஷ் ரெய்னா, தமிழக வீரர் பத்ரிநாத் ஆகியோருக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும்.

தென்னாபிரிக்க வீரர்கள் நிற்னி, மோர்கல் மற்றும் முரளிதரன் ஆகியோர் பந்து வீச்சில் எந்த விதமான தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை. சென்னை அணியின் பந்து வீச்சு கவலை அளிக்கம் வகையில் உள்ளது.

ராஜஸ்தான் அணி துடுப்பாட்டம், பந்து வீச்சில் சரிசமமாக உள்ளது. வோர்னின் பந்து வீச்சு சென்னை துடுப்பாட்ட வீரர்களுக்கு சவாலாக இருக்கும்.

(5)




# கே.சி.சி.சி. கிண்ணத்திற்கான இறுதி ஆட்டம்
# கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் இன்று

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் கே.சி.சி.சி விளையாட்டுக் கழகம் 1991ஆம் ஆண்டிலிருந்து வருடாந்தம் நடாத்தி வரும் மட்டுப்படுத்தப்பட்ட 30 ஓவர்க



சென்றல் விளையாட்டுக் கழகம்



கே.சி.சி.சி விளையாட்டுக் கழகம்

ளைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இவ்வாண்டிற்கான இறுதிப் போட்டி இன்றுகாலை 9மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

15வது தடவையாக இவ்வாண்டு நடைபெறும் இச்சுற்றுப் போட்டியில் யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கத்தில் பதிவு செய்த 17 விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்றின.

இதில் லீக் முறையில் நடைபெற்ற கடந்த காலங்களில் யாழ். பல்கலைக்கழகம் 4 தடவையும் சென்றலைட்ஸ் வி.கழகம் 3 தட வையும் பற்றிசியன்ஸ் வி.கழகம் 3தட வையும் மானிப்பாய் பரிஸ் வி.கழகம் 2 தடவையும் ஜொலிஸ்ரார் வி.கழகம் ஒரு தடவையும் கிண்ணத்தை சுவீகரித்தமை குறிப்பிடத்தக்கது. இவ்வாண்டிற்கான இறுதியாட்டத்தில் கே.சி.சி.சி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து சென்றல் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது. இந்தப் போட்டிக்கு பிரதம விருந்தினராக கொக்குவில் இந்துக்கல்லூரி அதிபர் ஏ.அகில தாஸ் கலந்து கொள்வதுடன் சிறப்பு விருந்தினராக கொக்குவில் இந்துக்கல்லூரி பிரதி அதிபர் எஸ்.வி.மகேந்திரன் கலந்து கொள்கிறார்.

# வான் புலிகள் தோற்றுவித்த புதிய அச்சுறுத்தல்

உலக சந்தையில் அதிகரித்துவரும் விலை உயர்வுகளில் எரிபொருட்களின் விலை உயர்வுக்கு அடுத்த நிலையில் அரிசியின் விலை உயர்ந்து வருவது மூன்றாம் உலக நாடுகளை அதிகம் பாதித்து வருகின்றது.

இந்த விலை உயர்வு மேற்கத்தைய நாடுகளைவிட அரிசி உணவு வகையில் அதிகம் தங்கியுள்ள ஆசிய நாடுகளையே அதிகம் பாதித்துள்ளது. அரிசியை குறைந்தளவில் நுகர்ந்துவரும் பிரித்தானியாவிலும் அதன் விலை கடந்த வாரம் இரு மடங்காக அதிகாரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

உயிரியல் எரிபெருட்களுக்கான பயிர்ச் செய்கை, வரட்சி என்பன அரிசி உற்பத் தியை அதிகம் பாதித்துள்ள காரணிகள். இந்த காரணிகளால் குறைவடைந்துள்ள அரிசி உற்பத்தி ஆண்டுக்கான உலகின்

**முல்லைத்தீவில் இருந்து எழுந்த வான் புலிகள் 10 நிமிடங்களில் மணலாற்றை தாக்கி யுள்ளனர் என்றால் திருமலையில் உள்ள படை நிலைகளை தாக்கு வதற்கு அவர்களுக்கு அதிக சிரமங் கள் இருக்கப்போவதில்லை.**

தேவையாகிய 430 மில்லியன் தொன் அளவை நிறைவுசெய்யப் போதுமானது அல்ல. எனினும் தமது மக்களின் உணவு நெருக்கடிகளை சீரசெய்வதற்கு அதிக நிதியை ஒதுக்க வேண்டியது அரசுகளின் கடமையாக உள்ள போதும் இலங்கையில் தீவிரமடைந்துவரும் போர் முனைப்புக்கள் மக்களை மேலும் பாதிக்கும் என்பதில் ஐயமில்லை.

கடந்தவாரம் முகமாலை களமுனையில் படையினர் சந்தித்த மூன்றாவது தோல்வி பல மட்டங்களில் சூடான விமர்சனங்களை ஏற்படுத்தி வருவதுடன், படைத்தரப்பிலும் பல கருத்து மோதல்களை அது உருவாக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 23 ஆம் திகதி முகமாலையில் நடைபெற்ற இந்த சமர் தொடர்பாக பாதுகாப்பு அமைச்சக உயர் அதிகாரிகளுக்கு எதுவும் தெரியாது என்ற கருத்துக்கள் எழுந்துள்ள நிலையில் இராணுவத்தளபதி அதனை மறுத்துள்ளார். விடுதலைப்புலிகளின் பலத்தை தாம் குறைத்து மதிப்பிட வில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த படை நடவடிக்கையில் ஏற்பட்ட இழப்புக்கள் குறித்து அவர் அதிகம் எதுவும் தெரிவிக்காதபோதும், 165 இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும், 450 இற்கு மேற்பட்டோர் காயமடைந்துள்ளதாகவும் கடந்த வார நடுப் பகுதியில் கொழும்பில் இருந்து வெளியாகிய வாரஏடு ஒன்று இராணுவ உயர் அதிகாரி ஒருவரை மேற்கோள்காட்டி தெரிவித்துள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

எனினும் மேற்படி படை நடவடிக்கையில் ஏற்பட்ட தோல்விக்கான பழிச்சொல் 53 ஆவது படையணியின் கட்டளை அதிகாரி பிரிகேடியர் சமந்த சூரியபண்டாரவின் தலையில் வீழ்ந்துளளதுடன், அவரின் பதவியும் பறிபோயுள்ளது. தோல்வியுறும் படை நடவடிக்கைகளில் இருந்து உயர் அதிகாரிகள் தப்புவதற்காக கட்டளைத் தளபதிகளின் பதவிகளைப் பறிப்பது இலங்கையில் வழமையான ஒன்று.

கடந்த ஆண்டு மன்னார் களமுனையில் விளாத்திக்குளம், முள்ளிக்குளம் பகுதிகளில் நடைபெற்ற சமரில் படையினர் சந்தித்த இழப்புகளை தொடர்ந்து 57 ஆவது படையணியின கட்டளைத் தளபதி பிரிகேடியர் சுமித் மானவடு பதவிநீக்கம் செய்யப்பட்டிருந்தார். 1999 ஆம் ஆண்டு காலப்பகுதியிலும் வன்னியில் நடைபெற்ற ஜீரசிந்து படை நடவடிக்கை தோல்வியில் முடிந்த போது அதனை வழி நடத்திய மேஜர் ஜெனரல் வசந்த பெரேரா அதன் பொறுப்பில் இருந்து நீக்கப்பட்டிருந்தார். இவ்வாறு நீக்கப் பட்டவர்களின் பட்டியல் நீளமானது.

எனினும் படைத் தளபதிகளின் மறு சீரமைப்பில், 53 ஆவது படையணிக்கு தற்போதைய 55 ஆவது படையணியின் கட்டளை அதிகாரி பிரிகேடியர் கமால் குனரத்தினவும், 55 ஆவது படையணிக்கு பிரி கேடியர் பிரசன்னா டி சில்வாவும் நியமிக் கப்பட்டுள்ளனர். இவர்களின் பதவியேற்பு வைபவங்கள் வடபோர்முனையின் பலாலி படைத்தளத்தில் கடந்த வாரம் மிகவும் எளிமையாக நடைபெற்று முடிந்துள்ளது.

எனினும் இந்த நியமனங்கள் படைத்தரப்பில் பல கேள்விகளை தோற்றுவித்துள்ளது. ஏனெனில் இலங்கைப் படைத்தரப்பில் சிறப்பு படையணியின் கட்டளை அதிகாரியாகப் பணியாற்றியிருந்த பிரிகேடியர் பிரசன்னா டி சில்வா [illegible] இராணுவத்தலைமையகத்தால் ஓரங்கட்டப்பட் டிருந்தார்.

கிழக்கில் வாகரை மீதான சிறப்பு படை நடவடிக்கைகளை ஒருங்கிணைத்து வந்த கேணல் (அன்று கேணல் தர அதிகாரி) சில் வாவிடம் சிறப்பு படையணியின் சில கொம் பனித் துருப்புக்களை மன்னார் களமுனைக்கு அனுப்புமாறு இராணுவத்தளபதி அன்று கோரியிருந்தார். ஆனால் கேணல் சில்வா அதற்கு மறுத்ததனால் அவரை கட்டாய ஓய்வில் செல்லுமாறு இராணுவத்தளபதி லெப்.ஜெனரல் சரத் பொன்சேகா கோரியிருந்தார்.

எனினும் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ அதில் தலையிட்டு பிரசன்னா டி சில்வாவை இராணுவத்தின் நிர்வாகப் பிரிவுக்கு மாற்றிய தால் இந்த கருத்து மோதல் முடிவுக்கு வந்தது.

வாகரை படை நட வடிக்கை தொடர்பான வெற் றிவிழா பாதுகாப்புச்சபைக் கூட்டத்தில் கொண்டாடப் பட்டபோதும் அன்றைய 23 ஆவது படை யணியின் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் தயா ரத்நாயக்க மற்றும் சிறப்பு படைக் கட்டளை அதிகாரி கேணல்



பிரசன்னா டி சில்வா ஆகியோர் பாதுகாப்பு சபை கூட்டத் திற்கு அழைக்கப்பட்டிருந்ததும் இங்கு குறிப் பிடத்தக்கது.

ஆனால் தற்போது பிரிகேடியர் பிரசன்னா டி சில்வா மீண்டும் முன்னனி களமுனையின் கட்டளை அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளது இராணுவத் தளபதியின் செல்வாக்கு குறைய ஆரம்பித்துள்ளதா என்ற சந்தேகத்தை பல மட்டங்களில் தோற்றுவித்துள்ளது.

**இரவில் தாக்குதல் நடத்தும் சிறந்த பயிற்சி பெற்ற விடுதலைப்புலிகளின் விமானிகளும், அவர்களின் ஒருங்கிணைந்த நட வடிக்கைக ளுமே வான் தாக்குதல் வெற்றிகளின் இரகசியம் என படைத்துறை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.**

இவ்வாறு முகமாலை களமுனையின் இழப்புக்கள் பலத்த சர்ச்சைகளை உருவாக்கி வருகையில், அந்த சமர் நடைபெற்று மூன்று தினங்கள் கடந்த நிலையில் மணலாறு களமுனையின் உக்கிரம் அதிகரித்துள்ளது. கடந்த சனிக்கிழமை மணலாறு களமுனையில் உள்ள படையினர் மண்கிண்டிமலை, கொக்குத்தொடுவாய் நோக்கி முன்நகர முற்பட்டபோது அவர்களின் நிலைகள் மீது விடுதலைப்புலிகள் நடத்திய செறிவான பீரங்கித் தாக்குதல்களில் நான்கு படையினர் கொல்லப்பட்டும், 45 இற்கும் மேற்பட்ட படையினர் காயமடைந்தும் உள்ளதாக படைத்தரப்பு தெரிவித்திருந்தது.

இந்த எறிகணை வீச்சுக்களைத் தொடர்ந்து 27 ஆம் திகதி அதிகாலை முல்லைத்தீவில் உள்ள விடுதலைப்புலிகளின் தளம் ஒன்றில் இருந்து புறப்பட்டு சென்ற வான்புலிகளின் இரண்டு சிலின்143 இலகுரக விமானங்கள் மணலாறு, கல்குளமா, சிங்கபுர பகுதிகளில் உள்ள 23 ஆவது படையணியின் 3 ஆவது பிரிகேட்டின் தலைமையகம் மற்றும் பல் குழல உந்துகணைச் செலுத்திகள், பீரங்கிகளின் தளங்கள் மீது 3 குண்டுகளை வீசிவிட்டு திரும்பியுள்ளன.

நடைபெற்றுவரும் நான்காவது ஈழப் போரில் வான்புலிகள் நடத்திய ஆறாவது தாக்குதல் இதுவாகும். எனினும் தரைத்தாக்குதலுக்கு ஆதரவாக வான்புலிகள் ஆதரவுத் தாக்குதலை நடத்தியது இது இரண்டாவது தடவையாகும் கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் 22 ஆம் திகதி அனுராதபுரம் வான்படைத் தளத்தின் மீதான தாக்குதலின் போதும் வான்புலிகள் ஆதரவுத் தாக்குதல்களை நடத்தியிருந்தனர்.

கடந்தவாரம் நடைபெற்ற வான்தாக்குதலில் தமக்கு சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை எனவும், ஒரு படைச்சிப்பாய் காயமடைந்ததாகவும் படைத்தரப்பு தெரிவித்து வருகின்றபோதும் அதனை உறுதிப்படுத்துவது சிரமமானது. அதிக பாதுகாப்பு கொண்ட இராணுவ வலயத்திற்குள் நடைபெற்ற இந்த தாக்குதலின் இழப்புக்கள் வெளிவருவது மிகவும் கடினமானது.

எனினும் வான்புலிகளின் இந்த தாக்குதல் உளவியல் தாக்கங்களை தென்னிலங்கையில் உண்டுபண்ணியுள்ளது. வான்புலிகளின் தாக்குதல் வலிமையை முறியடிக்கும் நோக்குடன் தாக்குதல் விமானங்கள் மற்றும் உலங்கு வானூர்திகளை கடந்த ஒரு வருடமாக நவீனமயப்படுத்தி வரும் அரசுக்கு இந்த தாக்குதல் பலத்த ஒரு அடியாக வீழந்துள்ளதாகவே கருதப்படுகின்றது.

நவீன ராடர்கள், வான் எதிர்ப்பு பீரங்கிகள், கனரகத் துப்பாக்கிகள், குறுந்தூர விமான எதிர்ப்பு ஏவுகணைகள் என்பவற்றை அரசு கடந்த ஒரு வருடத்தில் அதிகமாக கொள்வனவு செய்ததுடன், எம்.ஐ24 மற்றும் எம்.ஐ35 ரக தாக்குதல் உலங்குவானூர்திகளையும் நவனமயப்படுத்தியிருந்தது. விடுதலைப் புலிகளின் விமானங்களை இடைமறித்து தாக்குவதற்கு தன்னிடம் உள்ள எப்7 ரக தாக் குதல் விமானங்களை மறுசீரமைத்ததுடன், சீனத் தயாரிப்பான புதிய நவன எப் 7 மற்றும் ரஷ்யாவின் மிக்29 ரக தாக்குதல் விமானங்களின் கொள்வனவுகளும் முடுக்கிவிடப் பட்டிருந் தன.

அரசின் இந்த ஓராண்டு காலப்பலப் படுத்தல்களின் மத்தி யில் விடுதலைப் புலிகள் ஆறாவது தடவை யாகவும் வான் தாக்கு தலை நடத்தியதும், அவர் களின் விமானங்கள் வெற்றிகரமாகத் தளம் திரும்பியதும் தென்னிலங்கையில் பலத்த சர்ச்சைகளை கிளப்பியுள்ளது. பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.க. இந்த தாககுதலின் பின்னர் அரசின் படை பலம் தொடர்பாக தனது சந்தேகத்தையும் வெளியிட்டுள்ளது.

விடுதலைப்புலிகளின் விமானங்கள் வான்படை யனரின் ராடர் திரைகளில் அவதானிக்கப்பட்டபோதும் அவை குறுகிய காலத்திற்குள் தாக் குதலை நடத்தி விட்டு திரும்பியதால் தம் மால் அவற்றை தாக்க முடியவில்லை என இந்த தாக்கு தலை தடுக்க முடியாதது குறித்து கருத்து தெரிவிக்கையில் இலங்கை விமானப் படை பேச்சாளர் விஜய சூரிய தெரிவித்துள் ளார்.

எனினும் இரவில் தாக்குதல் நடத்தும் சிறந்த பயிற்சி பெற்ற விடுதலைப்புலிகளின் விமானிகளும், அவர்களின் ஒருங்கிணைந்த நடவடிக்கைகளுமே வான் தாக்குதல் வெற்றிகளின் இரகசியம் என படைத்துறை அதிகாரி ஒருவர் தெரிவித்துளளார். விமானப் படை யினரை பொறுத்தவரையில் இரவில் தாக்குதல் நடத்தும் வல்லமையில் அவர்கள் இன்றுவரை மேலோங்க வில்லை என்ற கருத்துக்களும் பலமாக எழுநதுள்ளன.

அதிகாலை 1.25 மணியளவில் முல்லைத்தீவில் இருந்து வானில் எழுந்த விடுதலைப்புலிகளின் இரு விமானங்கள் நெடுங்கேணிக்கு மேலாக பறந்து சென்று மணலாறு, கல்குளமா மற்றும் சிங்கபுர பகுதிகள் மீது குண்டுகளை வீசி விட்டு அதிகாலை 1.50 மணிய ளவில் தளம் திரும்பி விட்ட தாக தெரிவிக்கப்படுகின்றது. இந்த தாக்குதல் தொடர்பாக விடுதலைப் புலிகள் உத்தியோக பூர்வமாக எதுவும் தெரிவிக்காத போதும் இது ஒரு வழமையான வண்தாக்குதல் என விடுதலைப் புலிகளுக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

படையினரின் ராடர் திரைகளில் குழப்பங்களை உண்டுபண்ணும் நோக்கத்துடன் விடுதலைப்புலிகளின உலங்குவானூர்தி ஒன்றும் பறப்பில் ஈடுபட்டதாக சில தகவல்கள் தெரிவிக்கின்றபோதும், தமது விமானங்கள் பாதுகாப்பாக தரையிறங்குவதை உறுதிப்படுத்தும் நோக்கத்துடனேயே உலங்குவானூர்தி பறப்பில் ஈடுபட்டதாக வேறு சில தகவல்கள் தெரிவித்துள்ளன.

எனினும் படையினரின் முன்னணிக் களமுனைகள் மீது வான்புலிகள் தாக்குதலை நடததியது படையினரின் வான் எதிர்ப்பு பலம் தொடர்பான பலத்த கேள்விகளை எழுப்பியுளளது. மணிக்கு ஏறத்தாள 240 கி.மீ வேகத்தில் பறக்கும் இந்த விமானங்கள் முல்லைத்தீவில் இருந்து மணலாற்றை 8 தொடக்கம் 10 நிமிடங்களில் அடைந்துவிடும் எனவும எனவே அவற்றை துரத்திச் சென்று தாக்குவது கடினம் எனவும் படைத்தரப்பு தெரிவித்துள்ளது. ஆனால் தொடர்ச்சியாக நடைபெறும் வான் தாக்குதல்கள், விடுதலைப் புலிகளின் விமானங்களை சிறியரக ஆயுதங்களால் சுட்டு வீழ்த்த முடியும் என்ற படைத்தரப்பின் நம்பிக்கைகளில் பலத்த வீழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. மிகவும் தாழ்வாகப் பறக்கும் இந்த விமானங்களை சாம்16 ரக ஏவுகணைகளால் குறிவைப்பதும் கடினம் என படைத் துறை அவதானிகள் தெரிவித்துள்ளனர். அதாவது மரங்களுக்கு மேலாக தாழ்வாகப பறக் கும் இந்த விமானங்களை ஏவுகணைகள் தமது தாக்குதல் இலக்கிற்குள் கொண்டு வருவதற்கு சிறிது நேரம் எடுக்கும். அந்த இடைவெளியில் விமானம் வேறு மரங்களையும் தாண்டி சென்றுவிடும் என்பது அவர்களின் வாதம்.

கடந்த ஆண்டு கொலன்னாவ பகுதியில் மேற்கொள்ளப்பட்ட வான் தாக்குதலின் போது வான்புலிகளின் விமானங்களை வீழ்த்துவதற்கு படையினர் சாம்16 ஏவுகணைகள் மூலம் மேற்கொண்ட முயற்சிகள் தோல்வியில் முடிந்ததும் அறிந்தவையே.

எனினும் வான்புலிகள் தொடர்ச்சியாக இலங்கை அரசின் அதி உயர் பாதுகாப்புக்களைக் கொண்ட கட்டுநாயக்கா, அனுராதபுரம் போன்ற முன்னனி வான்படைத் தளங்களையும் , பலாலி கூட்டுப்படைத் தளத்தையும் , கொலன்னாவ, முத்துராஜவெல பொருளாதார மையங்களையும் , மணலாறு முன்னணி நிலைகளையும் தாக்கிவிட்டு வெற்றிகரமாகத் திரும்பியது பலரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியிருக்கும் என்பதில் ஐயமில்லை.

புலிகளின் மட்டுப்படுத்தப்பட்ட வளங்களுடன் உயர் தொழில்நுட்பங்கள், மற்றும் நுணுககமான உத்திகளின் ஒருங்கிணைந்த நடவடிக்கை இது என்பதை மறுக்க முடியாது.

இதனிடையே உக்கிரமடைந்துள்ள மணலாற்று களமுனையில் விடுதலைப்புலிகள் கடந்த புதன்கிழமை மற்றும் வியாழக்கிழமைகளில் தொடர்ச்சியாக எறிகணை தாக்குதல்களை நடத்தி வருகின்றனர்.

**தொடர்ச்சியாக நடை பெறும் வான் தாக்குதல்கள் விடு தலைப் புலிகளின் விமானங்களை சிறிய ரக ஆயுதங்களால் சுட்டு வீழ்த்த முடியும் என்ற படைத்தரப்பின் நம் பிக்கைகளில் பலத்த வீழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.**

ஜனகபுர, கிரிபன்வேவா, ஜாயா 11, பதவி சிறீபுர ஆகிய பகுதிகளில் வீழ்ந்து வெடிக்கும் எறிகணைகளால் அப்பகுதியில் பெரும் பதற்றமான சூழ்நிலைகள் உருவாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. கடந்த புதன் கிழமை நடைபெற்ற தாக்குதலில் 25 இராணுவத்தினர் காயமடைந்திருந்தனர் என்று புலிகள் அறிவித்துள்ளனர்.

இந்த தாக்குதல்களில் காயமடைந்தவர்கள் பதவியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன், அப் பகுதிகளில் வசித்து வந்த சிங்களக் குடியேற்றவாசிகளும் இடம் பெயர்ந்து வருகின்றனர்.

மேலும் கடந்த வியாழக்கிழமை கெப்பிட்டிக்கொல்லாவ பகுதியில் உள்ள துத்து வெலப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டகிளைமோர் தாக்குதலில் இருசிறப்பு அதிரடிப்படை யினர் கொல்லப்பட்டுள்ளதும் எல்லைக் கிராமங் களில் பதற்றத்தை தோற்றுவித்துள்ளது.

வடபோர்முனையின் எல்லை கிராமங்களின் பாதுகாப்பு கருதி கிழக்கில் இருந்த சிறப்பு அதிரடிப்படையினர் கெப்பிட்டிக் கொல்லாவ, அனுராதபுரம் பகுதிகளுக்கு அண்மையில் நகர்த்தப்பட்டிருந்தனர். ஆனால் கிழக்கின் களமுனைகளின் தன்மைகள் வேறு வடக்கு போர்முனைகள் வேறு எனபதை தான் இந்த தாக்குதல் எடுத்து காட்டியுள்ளது.

கடந்த புதன்கிழமை முகமாலையில் ஆரம்பித்த தாக்குதல்கள் தென்னிலங்கையின் பிலியந்தலைவரை சென்று தற்போது மணலாறில் மையங்கொண்டுள்ளது. மணலாற்று களமுனையில் நடவடிக்கையில் ஈடுபட்டுவரும் 59 ஆவது படையணியையும், அவர்களுக்கு ஆதரவு வழங்கிவரும் 23 ஆவது படையணியின் 3 அவது பிரிகேட் படையினரையும் குறிவைத்து விடுதலைப்புலிகள் தொடர்ச்சியாக மேற்கொண்டுவரும் எறிகணை வீச்சுக்கள் அப்பகுதியில் ஒரு பெரும் சமர் ஒன்று விரைவில் ஆரம்பிக்க போகின்றது என்பதை எதிர்வுகூறி நிற்கின்றது.

**பாதுகாப்பு ஆய்வு**

## வேல்ஸிலிருந்து அருஷ்

அண்மையில் முல்லைத்தீவில் உள்ள சாலை கடற்பரப்பில் வைத்து ஒரு தொகுதி எறிகணைகளையும், வேறு பல நவீன ஆயுதங்களையும் விடுதலைப்புலிகள் தரையிறக்கி உள்ளதாகவும், அவர்கள் தொடர்ச்சியாக மேற்கொண்டுவரும் எறிகணை வீச்சுக்கள் அதனையே உறுதிப்படுத்துவதாகவும் படையினரின் புலனாய்வுத்துறை கடந்த வியாழக்கிழமை தெரிவித்துள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

எனினும் படையினர் தற்போது எதிர்கொண்டு வரும் பல முனை தாக்குதல்களுக்கு மத்தியில் வான்புலிகளின் தாக்குதல்கள் புதிய அச்சுறுத தல்களை அரசிற்கு ஏற்படுத்தியுள்ளது.

இந்த அச்சுறுத்தல்களில் இரண்டு முக்கியமானவை.

ஒன்று முல்லைத்தீவில் இருந்து எழுந்த வான்புலிகள் 10 நிமிடங்களில் மணலாற்றை தாக்கியுள்ளனர் என்றால் திருமலையில் உள்ள படைநிலைகளை தாக்குவதற்கு அவர்களுக்கு அதிக சிரமங்கள் இருக்கப்போவதில்லை.

இரண்டாவது தொடர்ச்சியாக நடைபெறும வான் தாக்குதல்கள் மூலம் வான்புலிகள் ஒரு போரியல் அங்கீகாரத்தை பெற்றுவிடுவார்கள். *

**நன்றி வீரகேசரி வார ஏடு**

# மதுரைப் பண்டிதர் கலாநிதி க.சச்சிதானந்தனின் வாழ்வியல் பின்னணியும் பல்துறை ஆற்றல் பண்பும்

பண்டிதர் சச்சிதானந்தனின் வாழ்க்கைப் பின்னணி பரந்து விரிந்ததொரு புலமைமிக்க பரம்பரையைக் கொண்டது. இவரது தந்தையின் மூதாதையர் தும்பளைப் பகுதியில் ஏழு பரம்பரையாக சோதிடம், பஞ்சாங்கம் கணிப்பதில் வல்லவர்கள். அவர்களில் ஐந்து தலைமுறையை நினைவுபடுத்திப் பார்த்தால் பரமானந்த சோதிடர் → வேலாயுதபிள்ளை → பெரியதம்பிப் பிள்ளை → வேற்பிள்ளை → கணபதிப்பிள்ளை என்ற தொடரில் அடுத்து வந்தவரே சச்சிதானந்தன்.

இவர்களில் 'ரவீந்திரநாதன்' தந்தையைப் போல கவிதை கதைகள் எழுதக் கூடியவர். 'சாருகாசினி' திருமணம் செய்து இரண்டு குழந்தைகளுடன் அமெரிக்காவில் வாழ்ந்து வருபவர். தற்போது தந்தையின் இறுதிக் கடமைகளில் இலங்கைக்கு வந்து கலந்துகொண்டார். 'மஞ்சுகாசினி' சிறு வயதிலேயே இவர்களை விட்டுப் பிரிந்ததால் இவரின் நினைவாக, ''மஞ்சுகாசினியம்- இயங்கு தமிழியல், மஞ்சு மலர்க்கொத்து - குழந்தைப் பாடல்கள்'' எழுதி வெளியிட்டார்.

**"எளிய வாழ்வு, உயர்ந்த எண்ணம், பரந்த உள்ளம், ஆழ்ந்த அன்பு இவை நான்குமே ஒருவனுக்கு இம்மண்ணுலகத்திலேயே விண்ணுலக வாழ்வை அளிக்க வல்லன" எனச் சதா கூறி அவ்வாறே வாழ்ந்து காட்டியவர் பண்டிதர் கலாநிதி க.சச்சிதானந்தன்.**

இவ்வாறான சோதிட பரம்பரையில் வந்த கணபதிப்பிள்ளை மாவிட்டபுரத்தைச் சேர்ந்த உடையார் பரம்பரையில் நாராயண முதலியார் → மருதர் உடையார் → வேலாயுதர் உடையார் → மருதர் உடையார் + பொன்னு தம்பதியினரின் 7 பிள்ளைகளில் இளைய மகளான தெய்வானைப்பிள்ளையை மணம் முடித்து 19.10.1921 இல் உதித்த மகனே பண்டிதர் சச்சிதானந்தன். இவருக்கு ஒரு சகோதரியும் இருந்தார். அவரும் இப்போது உயிருடன் இல்லை.

சச்சிதானந்தனின் தந்தைவழி, தாய்வழிப் பரம்பரைச் சூழல் இவரை பெயருக்கும் புகழுக்கும் உரியதோர் அறிவாளியாக உருவாக்கியது. தந்தைவழி சோதிடக்கலையும், புராணப் படிப்பும் இவருக்கு 14 வயதிலேயே தெளிவாகியது. பேரனான ஏரம்புப்புலவரின் பாட்டியற்றும் திறனும், பாளி, சமஸ்கிருதம், தமிழ் போன்ற மும்மொழிப் புலமையும் இவரிலும் வித்தூன்றி விழுதுவிட்டது.

### ஆரம்பக்கல்வி

பருத்தித்துறை தட்டாதெரு மெ.மி.த.க. பாடசாலையிலும், காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியிலும் ஆரம்பக்கல்வியைக் கற்றார்.

### இடைக்காலக்கல்வி

1936-1937 காலப்பகுதியில் ஹாட்லிக் கல்லூரியில் ஆங்கில மொழிமூலக் கல்வியை விஞ்ஞானப் பிரிவில் சேர்ந்து கற்றார்.

### உயர்கல்வி

தமிழில் கொண்ட பெரும்பற்றுதலால் தமிழைச் சிறப்பாகக் கற்று கலைமாணிப் பட்டம் பெற்றவர். 1941.09.30 இந்தியா- இலங்கை இரண்டுக்குமான பண்டிதர் பரீட்சையில் (20 வயதில்) தோற்றி முதன்மைச் சித்தியைப் பெற்றவர்.

### பல்துறைக்கல்வி

**1. வடமொழிக் கல்வி**

சிவப்பிரகாச தேசிகரிடமும், சுப்பிரமணிய சாஸ்திரிகளிடமும், மாவை கு.பாலசுந்தரக் குருக்களிடமும் கேள்வி ஞானமாகவும் -பாடமாகவும் கேட்டுக் கற்றுக்கொண்டு முறைப்படி வேதத்தை ஓதியும் வந்தவர்.

**2. ஆங்கிலக் கல்வி**

ஹாட்லிக் கல்லூரியில் தொடங்கிய ஆங்கில மொழிமூலக் கல்வியினூடாகவும், சிறு வயதிலிருந்தே சேக்ஸ்பியரின் நாடகங்கள், கதைகள், செல்லி, பைரன், கோமர் போன்றோரின் ஆங்கில ஆக்கங்களை வாசிக்கும் திறனினூடாகவும் ஆங்கிலக் கல்வியை வளர்த்துக்கொண்டவர்.

**3. உளவியல் கல்வி**

உளவியலின் தந்தை என்றழைக்கப்படும் டாக்டர் ''பியமன்'' என்பவரிடம் படித்தவரும்; உளவியலிலே உயர்பட்டம் பெற்றவரும்; நரம்பியல், மெய்யியல், சமூகவியல் என்பவற்றில் சிறப்புடையவருமான ''டாக்டர் சிவப்பிரகாசம்'' என்பவரிடம் உளவியல் தத்துவங்களை நன்கு கற்றுத் தேர்ந்தவர்.

இவ்வாறாக கணிதம், விஞ்ஞானம், வானியல், சோதிடம், உளவியல், ஆங்கிலம், வடமொழி, தமிழ் என்று பல்துறைக் கல்வியிலும் சிறந்து விளங்கிய சச்சிதானந்தன் தனது இருபத்தெட்டாவது வயதில் தங்கள் உறவுக்குள்ளேயே உதித்ததோர் மாவிட்டபுரத்தைச் சேர்ந்த உத்தமியான பரமேஸ்வரியை மணம் முடித்து இல்லற வாழ்க்கையை இனிதே ஆரம்பித்தார்.

இவர்களுக்கு ஏழு பிள்ளைகள் -ரவீந்திரநாதன், சாருகாசினி, மஞ்சுகாசினி, கணநாதன், பத்மாசனி, சிவநாதன், குகநாதன்.

கணநாதன் பொறியியலாளராக அமெரிக்காவில் இருக்கிறார். ''பத்மாசனியும்'' முகாமையாளராகக் கொழும்பில் பணிபுரிந்து அண்மையில் மணம்முடித்து லண்டனில் வாழ்ந்து வருகின்றார். 'சிவநாதன்' கணித ஆசிரியராக புலோலி மெ.மி.த.க பாடசாலையில் கடமையாற்றுகிறார். 'குகநாதன்' (மருத்துவத் துறையில்) டாக்டர் பட்டம் பெற்று மருத்துவப் பெண்ணையே மணம்முடித்து அவுஸ்திரேலியாவில் வாழ்ந்து வருகின்றார்.

### பல்துறை ஆற்றல்கள்

**1. சிறந்த ஓவியர்**

இவர் எதைப் பார்த்தாலும் அப்படியே வரைந்துவிடும் ஆற்றல் உடையவர். தனது கவிதைகளுக்கு குறிப்பாக ''காதலி கையை முத்து'' என்ற கவிதைக்கு தானே படமும் வரைந்துள்ளார். விபுலானந்த அடிகளாரின் யாழ்நூல் ஆராய்ச்சிக்கு உதவியதுடன் அதிலுள்ள ''மகரயாழ், குழல்'' என்பவற்றை வரைந்தும் கொடுத்துள்ளார்.

**2. சிறந்த ஆசிரியர்**

அ. கணித ஆசிரியராக

- நீர்கொழும்பு சென்மேரிஸ் கல்லூரி (1946-47)
- கரவெட்டி திருஇருதயக்கல்லூரி (1947-50)
- உடுவில் மகளிர் கல்லூரி, நடேஸ்வராக் கல்லூரி (1950-57)
- பரமேஸ்வராக் கல்லூரியில் கணிதம், விஞ்ஞானம் ஆகிய இருபாடங்களிற்கும் ஆசிரியராக இருந்தவர் (1957-1961 வரை)

ஆ. சமஸ்கிருத ஆசிரியராக

- லண்டன் பல்கலைக்கழக உள்வாரிப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு 1958,59 களில் கற்பித்தவர்.

இ. தமிழாசிரியராக

- யாழ்.இந்துக் கல்லூரி, யாழ்.மத்திய கல்லூரி (க.பொ.த உயர்தரத்திற்கு)

ஈ. அதிபராக, உளவிய லாசிரியராக, விரிவுரையாளராக, மன்றப் போஷகராக

- பலாலி ஆசிரிய கலாசாலையில் (1967-1987 வரை)
- சைவவிளக்கு, கலாவதி ஆகிய வெளியீடுகளில் எழுதியமை

உ) இலங்கைப் பாடநூற் சபையின் பிர தான உறுப்பினராகவும், தமிழ்மலர் ஆசிரி யராகவும்

- 1965-68 காலத்தில் கல்விப் பணிப்பாள ராக இருந்த ''மாமூட்ஸ்'' என்பவரால் உயர்கல்விச் சபையின் அங்கத்தவராக ஏற்றுக்கொள்ளப்பட்டார். டாக்டர் என்.எம். பெரேராவின் வேண்டுகோளின்படி ''முதலாம் தமிழ்மலர்'' எழுதியவர் 3ஆம், 6ஆம் தமிழ் மலர் ஆக்க உதவியவர்.

**3. சிறந்த எழுத்தாளர்**

ஈழகேசரி பத்திரிகையிலும், இந்திய இதழான சக்தியிலும், சைவ ஊழியன், புத்தெழில், சோதிட பரிபாலினி, ஈழநாடு, முரசொலி, கம்பன்கழக வெளியீட்டு மலர்... போன்ற பல இதழ்களிலும் இவருடைய ஆக்கங்கள் வெளி வந்துள்ளன. எனினும் ''ஈழகேசரியில்'' 17 வயது தொடக்கம் ஆனந்தன், சச்சி, பண்டிதர், சச்சிதானந்தன் என்ற புனைபெயர்களிலும், சொந்தப் பெயரிலும் எழுதி வந்துள்ளார். சிறு கதைகள், நாவல், கட்டுரைகள், கவிதைகள், தர்க்க விமர்சனங்கள் போன்றவை இதில் இடம்பெறுவதைக் காணலாம்.

அ) சிறுகதைகள்

இன்னொரு முத்தம், அவிந்ததீபம், சமர கவியின் மறுபுறம், எங்கெழில் என் ஞாயிறு, பிள்ளையார் தீர்த்த பிசகு, அன்பில் மரணம் உண்டா?, பனைகள் வரைந்தமடல், தண்ணீர் தாகம், நல்லானின் கதை, ஹரிஜனங்களின் கண்ணீர்

என்ற பத்துச் சிறுகதைகளில் கிடைக்கப் பெற்ற சிலவற்றில் ''தண்ணீர்த்தாகம்'' என்ற சிறுகதை சிறப்பானதாக விளங்குகின்றது. ஈழத்து முதன்மைச் சிறுகதைகள் ஏழில் முதலாவதாக வைத்து எண்ணப்படுவது தண்ணீர்த் தாகமே. 1964 இல் முற்போக்கான சிந்தனையோடு மண்ணின் பிரச்சினையை மண்வாசனையுடன் எடுத்துக் காட்டியவராக போற்றப் படுபவர்.

ஆ) நாவல்

'அன்னபூரணி' என்ற ஒரேயொருவர் நாவல். இது ஈழகேசரியின் 12.07.1942 - 20.12.1942 வரை 'அபசகுனம்' தொடக்கம் 'அமைதி' வரை 33 அத்தியாயங்களைக் கொண்டு தொடர்ச்சியாக வெளிவந்தது. இவருக்குக் கல்கியுடன் இருந்த தொடர்பும், ஆங்கில எழுத்தாளர்களான கோமர், மில்ரன், ரெனிசன், பிறவுணி போன்றோரது கதைகளும் இவரை சிறுகதைகள், நாவல் எழுதத் தூண்டியது.

இ) இசைநாடகங்கள்

- ஆசை -1968 இல் பலாலி ஆசிரிய கலாசாலையில் இருமுறைமேடையேற்றப்பட்டது.
- சாவித்திரி-1977 இல் எழுதி மேடையேற்றப்பட்டது.
- தியாகமும் காதலும் - லட்சுமி நினைவு மலரில் வெளிவந்தது.
- அசோகன்-1948 இல் யா/திரு இருதயக் கல்லூரியில் மேடையேற்றப்பட்டது.
- அகலிகை-1954 இல் மேடை யேற்றப் பட்டது.

ஈ) நூல்கள்

**1. இலக்கணம்**

- தமிழில் - மஞ்சுகாசினியம்- இயங்குதமிழியல்(2001)
- ஆங்கிலத்தில் Manchuhasiniyam: Fundamentals of Tamil prosody.

(மஞ்சுகாசினியம்:தமிழ் யாப்பியலின் அடிப்படை (2002))

**2. காவியங்கள்**

I. குறுங்காவியங்கள்

- காத்திருந்தார்-புத்தெழில்-(1988)- புரட்டாதி முதலாம் இதழ்.
- அர்ப்பணித்தாள்-ஈழநாடு-(1986)

II. நெடுங்காவியங்கள்

- யாழ்ப்பாண காவியம் (1998)
- பருவப்பாலியர்படும்பாடு- இலங்கைக் காவியம் தொகுதி-I (2002)
- விடுதலைக்கு வேறொரு விலங்கும் - இலங்கைக் காவியம் -தொகுதி-II (2004)

III. கவிதைத் தொகுதிகள்

- ''ஆனந்தத்தேன்'' கவிதைத் தொகுதி- (1954)
- 'எடுத்தமலர்களும் தொடுத்தமாலையும்' (2004)
- 'மஞ்சு மலர்க்கொத்து' -சிறுவர்பாடல்கள் (2003)

IV. அரசியல் நூல்கள்

- தமிழில்- 'தியாகமாமலை' -கு.வன்னியசிங்கம் நினைவாக அமைந்தது (1960)
- ஆங்கிலத்தில் -(Foot prints of Fathers- நம்மூதாதையரின் அடிச்சுவடுகள்.)

V. இசைநூல்

- 'தமிழர் யாழியல்' -ஆரிய திராவிட பாஷாவிருத்திச் சங்க வெளியீடு (1996)

VI. வானியல், சோதிடம்

- ''சோதிட பரிபாலினியில்'' எழுதப்பட்ட பல கட்டுரைகள். (வால்வெள்ளி, கோள்கள் பற்றியவை)
- ஆங்கிலத்தில் எழுதப்பட்ட பல கட்டுரைகள்.
- இரகுநாதையருடைய பஞ்சாங்கம் கணிப்பதில் முக்கிய உறுப்பினராக இருத்தல். பல சோதிட, திதி, வருடப்பிறப்பு மாற்றங்கள் சம்பந்தமாக எழுதப்பட்ட விமர்சனங்கள்.
- வானியற் கழகத்தின் பிரதான உறுப்பினர்

VII. அரசியலில் ஈடுபாடுடையவர்

- தமிழரசுக் கட்சியின் முக்கிய உறுப்பினர்.
- 1958 கலவரத்தில்- காலிமுகத்திடலில் சத்தியாக்கிரக போராட்டத்தில் முன்னின்று உழைத்தவர்.



- ''தியாகமாமலை'' என்ற அரசியல் சார்நூலை எழுதியவர்.

VIII. பட்டங்கள் பலவற்றைப் பெற்றவர்.

- தமிழ் சிறப்புக் கலைப்பட்டம் - B.A (Hons)2nd upper class
- Diploma in Education London (1960-07-15)
- F.R.A.S London (1966-11-11)
- M.Phil-London (1978-11-17)
- ''ஆனந்தத்தேன்'' கவிதைத் தொகுதி- சாகித்திய மண்டல விருது பெற்றது.
- யாழ்ப்பாண காவியம்-
  - -வடகீழ் மாகாண அமைச்சின் சாகித்திய மண்டலப் பரிசு பெற்றது.
  - -பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை நினைவாக வழங்கப்படும் ''சம்பந்தன் விருது'' பெற்றது. (2001-12-10)
  - -வடக்கு கிழக்கு மாகாண ஆளுநர் விருது போன்ற விருதுகளைப் பெற்றது.
- யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தால்- ''கௌரவ கலாநிதி'' விருது
- கம்பன் கழக விருது (2000)
- அண்மையில் கொழும்பில் வைத்து ''கலா கீர்த்தி'' என்ற விருதும் இவருக்கு வழங்கப் பட்டது. (15-11-2005)

எனினும், இவற்றையெல்லாம் ஒரு பொருட்டாகக் கொள்ளாதவர் சச்சிதானந்தன். அவருக்கு வேண்டுவன எவை என்று தனது ''தமிழ்க் கவிப் பித்து'' என்ற கவிதையில் அவரே எடுத்துக் காட்டியுள்ளார்.

*பொன்னின் குவை எனக்கு வேண்டியதில்லை - என்னை*
*போற்றும் புகழ் எனக்கு வேண்டியதில்லை*
*தின்னத் தமிழெனக்கு வேணுமேயடா-தின்று*
*செத்துக் கிடக்கத் தமிழ் வேணுமேயடா*

*சாகில் தமிழ் படித்துச் சாகவேண்டும்- என்றன்*
*சாம்பல் தமிழ்மணந்து வேகவேண்டும்*
*ஓடையிலே என்சாம்பல் கரையும்போதும்*
*ஒண்தமிழே சலசலத்து ஓடவேண்டும்*

என்ற வேட்கையும். தனித்துவமும் உடையவர். அவர் எண்ணம்போலவே தமிழுக்காக அரிய பல இலக்கியங்களையும் காவியங்களையும் ஆக்கியளித்துள்ளார்.

தமிழுலகம் என்றும் அவரை நினைவு கூருமளவிற்கு எவராலும் படைக்கப்படாத உண்மைச் சம்ப வங்களை உள்ளபடி காவியங்களாய் யாவ ரும் படித்து விளங்கக் கூடிய முறையில் இலங் கைக் காவியமாக யாத்தளித்துள்ளார்- அவர் மறைந்து போனாலும் அவருடைய இலக்கி யங்களால் தமிழறிஞர்கள், தமிழ் ஆர்வலர் கள், தமிழை சிறப்புப் பாடமாகக் கற்போர், தமிழ்பேசும் உள்ளங்கள் யாவிலும் உறைந்து என்றைக்கும் நிலைத்திருப்பார் என்பதில் எதுவித ஐயமும் இல்லை.

**திருமதி நவமணி ராஜ்குமார்**
(தமிழாசிரியர்)
வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி,
பருத்தித்துறை.

அவர் எப்பொழுதும் சொல்லும் வார்த்தை, ''எளியவாழ்வு, உயர்ந்த நினைப்பு, பரந்த உள்ளம், ஆழ்ந்த அன்பு ஆகிய இந் நான்குமே ஒருவனுக்கு இம் மண்ணுலகத் திலேயே விண்ணுலக வாழ்வை அளிக்க வல்லன''

என்பதாகும். இவ்வார்த்தைக்கேற்பவே வாழ்ந்து காட்டி இன்று எம்மைவிட்டு நீங்கியவர் சச்சிதானந்தன். அவரின் பிரிவு தமிழுலகிற்கே ஓர் பேரிழப்பு. அவர் போன்ற மூத்த அறிஞர்கள் பலரை வரிசையாக நாம் இழந்து வருவது வேதனைக்குரியதே.

பூனை முட்டாளாக இருந்தால் எலி அதை விரட்டிவிடும்.

-இலங்கை

வலம்புரி

## ஐ.நா. சபை வெறும் கவலை தெரிவிக்கும் அமைப்பா?

வடக்குக் கிழக்குப் பிரதேசத்திலிருந்து ஒன்றரை இலட்சம் பேர் இடம்பெயர்ந்துள்ளமை குறித்து ஐ.நா சபை கவலை வெளியிட்டுள்ளது.

இலங்கை விடயத்தில் கவலை வெளியிடும் வெறும் அமைப்பாக மட்டும் ஐ.நா சபை இருப்பது இலங்கைத் தமிழர்களுக்கு கவலை அளிக்கும் விடயமாகும்.

ஐ.நா சபை இலங்கை விடயத்தில் பொறுப்புடன் நடந்துகொள்ளவில்லை என்பது தமிழ் தரப்புக் கருத்து. இலங்கையில் பல வருடங்களாக யுத்தம் நடந்தவண்ணமுள்ளது.

சிறுபான்மைத் தமிழினம் பெரும்பான்மை இனத்தால் நசுக்கப்படுகிறார்கள். அவர்கள் தம் தாயகத்தில் சுதந்திரமாக– எல்லா உரிமைகளும் பெற்று வாழத் துடிக்கிறார்கள். இது நியாயமானதோர் கோரிக்கையாகும்.

எனினும் அந்தக் கோரிக்கையை இதுவரை பெரும்பான்மையின அரசு ஏற்றுக் கொள்ளவில்லை.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படுமென்பது மட்டுமே அரசின் பேச்சாக இருக்கிறது. மாறாக நடப்பதெல்லாம் வேறு. இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கென சர்வ கட்சிக்குழு நியமிக்கப்பட்டது.

குழுவின் தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண சர்வ கட்சிக்குழுவின் தீர்வுப் பொதியை ஜனாதிபதியிடம் கையளித்தார்.

13-வது திருத்தச் சட்டமூலத்தை அமுல்படுத்துவதனூடாக இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதென்ற அறிவிப்பு விடப்பட்டது. ஆனால் அவற்றுக்கெல்லாம் நடந்ததென்ன?

சர்வதேசத்தை ஏமாற்றும் நாடகமே சர்வ கட்சி குழுவென்பதை இப்போதாவது உலகம் புரிந்து கொள்ளட்டும்.

மன்னாரில் யுத்தம், வன்னிப்பகுதியில் விமானக் குண்டுத்தாக்குதல், சொந்த மண்ணிலேயே இடம்பெயர்வு என்ற சோகத்தை தமிழ் மக்கள் நீண்டகாலமாக அனுபவித்து வருகின்றனர்.

எனினும் இது விடயத்தில் ஐ.நா. சபை காத்திரமான நடவடிக்கை எதனையும் மேற்கொள்ளவில்லை. ஐ.நா. சபையின் மனித உரிமை கண்காணிப்புக்குழுவை இலங்கையில் அமைக்க வேண்டுமென ஐ.நா. சபையின் மனித உரிமைகளுக்கான ஆணையாளர் லூயிஸ்ஆர்பர் அம்மையார் கோரிக்கை விடுத்திருந்தார், ஆனால் இதுவரை அந்தக் கோரிக்கை நிறைவேறவில்லை.

ஐ.நா. சபையின் மனித உரிமைகளுக்கான ஆணையாளர் ஒருவர் இலங்கையில், மனித உரிமைகள் கண்காணிப்புக்குழுவை அமைக்க வேண்டுமென கேட்டிருந்தும் அதற்கு இலங்கை அரசு ஒப்புதல் அழிக்காமல்விட, அந்தக் கோரிக்கை அப்படியே செயலிழந்தமை ஐ.நா சபையின் மிகப் பெரும் பலவீனமாகும்.

எனவே இலங்கைத் தமிழர் விடயத்தில் ஐ.நா. சபை பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும்.

கவலை தெரிவிப்பதுடன் மட்டும் தம் பணி முடிபடைந்து விட்டதாக அந்த அமைப்பு எண்ணிவிடலாகாது.

# சர்வகட்சிக் குழுவின் கலவையான இறுதித் தீர்வை ஏற்க முடியாது

## ஜே.வி.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு ஒற்றையாட்சி மற்றும் சமஷ்டி போன்றவற்றின் கலவையொன்றை தீர்வாக சர்வ கட்சிப் பிரதிநிதிகள் குழு முன்வைத்தால் அதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பதாக ஜே. வி. பி. தெரிவித்துள்ளது.

சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவின் தலைவர் திஸ்ஸ விதாரணவும் மேலும் சிலரும் வட அயர்லாந்துக்குச் சென்று அங்கு கடைப்பிடிக்கப்பட்ட இனப்பிரச்சினைத் தீர்வு முறைகளை இங்கும் முன்வைப்பதற்கு தீர்மானித்திருப்பதாக ஜே. வி. பியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் கூறியுள்ளார்.

அயர்லாந்துப் பிரச்சினையைத் தீர்ப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட முறை இலங்கையின் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு உதவும் என்பதில் அடிப்படை இல்லை. அங்கு புரட்டஸ்தாந்தவர்களுக்கும் கத்தோலிக்கர்களுக்கும் இடையிலேயே பிரச்சினை காணப்பட்டது என ஹேரத் கொழும்பு ஊடகமொன்றிடம் தெரிவித்துள்ளார்.

சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவின் இறுதித் தீர்வு முன்வைக்கப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து மக்களை விழிப்புணர்வூட்டும் திட்டங்களை நாடளாவிய ரீதியில் முன்னெடுப்பதற்கு ஜே. வி. பியின் அரசியல் குழு தீர்மானித்திருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, பொருள்களின் விலை அதிகரிப்பானது நாட்டு மக்களை பாரிய சிக்கலுக்குள் தள்ளியிருப்பதாக அவர் கூறியுள்ளார்.

உற்பத்தி யில் ஏற்பட்ட வீழ்ச்சி மாத்திரம் அரிசித் தட்டுப்பாட்டுக்கு காரணமில்லை. உற்பத்திப் பொருள்களை அரசாங்கம் உரிய முறையில் களஞ்சியப்படுத்தி விநியோகிக்காமையே முக்கிய காரணமெனவும் ஜே.வி.பியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் மேலும் தெரிவித்தார். (அ-5)

# வெளிநாட்டவர்களால் சமாதானத்தை ஒருபோதும் கொண்டுவரமுடியாது

## மகாத்மா காந்தியின் பேத்தி எலா காந்தி

(கொழும்பு)

சமாதானத்தை வெளிநாட்டவர்களால் கொண்டுவர முடியாது. இலங்கையர்களே அதனைத் தீர்மானிக்க வேண்டும் என மகாத்மா காந்தியின் பேத்தி எலா காந்தி தெரிவித்துள்ளார்.

சமயங்களுக்கிடையிலான பேரவையினால் கொழும்பு ட்றான்ஸ் ஏஸியா கோட்டலில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் பங்கேற்று கருத்து வெளியிட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த ஊடகவியலாளர் மாநாட்டில் கம்போடியா நாட்டின் அதிஉயர் பௌத்த பீடாதிபதியான சங்கைக்குரிய டெப் வொங், தேசிய சமாதானப் பேரவையின் நிறை வேற்றுப் பணிப்பாளர் கலாநிதி ஜெஹான் பெரேரா, அதன் பொதுச் செயலாளர் கிங்ஸ்லி ரொட்றிகோ உட்பட பலர் கலந்து கொண்டனர். மகாத்மா காந்தியின் பேத்தி எலா காந்தி அங்கு மேலும் கருத்து வெளியிடுகையில்.

அரசாங்கமாக இருந்தாலும் வேறுயாராக இருந்தாலும் வன்முறையற்ற தொரு தீர்வைக் காண்பதையே நாம் விரும்புகிறோம். ஆனால் கடைசியில் இலங்கை மக்களே தீர்மானிக்க வேண்டியவர்களாக இருக்கின்றனர்.

வெளிநாட்டவர்களோ வேறெவரோ வந்து தீர்வைத் தர முடியாது. அவ்வாறு எந்த நாட்டிலும் நடைபெற்றதில்லை. யுத்தத்தின் பாதையில் சென்றால் நாம் எவருமே வெற்றியாளராக முடியாது. ஏனெனில், இறுதியில் அழிவுகள் தான் மிஞ்சுவதாக இருக்கும். ஈராக்கிலும் மேலும் பல இடங்களிலும் இதனை நாம் கண்ணுற்றுள்ளோம். இறுதியில் சம்பந்தப்பட்டவர்கள் ஒன்றாக அமர்ந்து பிரச்சினைகள் குறித்துப் பேசுவதன் மூலமே தீர்வைக் காணமுடியும்,

சமாதானத்திற்கான சமரச முயற்சிகளை ஏன் தற்போது ஆரம்பிக்கக் கூடாது என நாம் கேட்கின்றோம். அந்த சமரச முயற்சிகளுக்கான முன் முயற்சி, சொந்த நாட்டு மக்களிடமிருந்தே வர வேண்டுமேயொழிய வெளிநாட்டவர்களிடமிருந்தல்ல. நாங்கள் வந்தோம் என்பதற்காக ஏதேனும் நடக்கும் என நீங்கள் நம்பிக்கை கொள்வது உகந்தது என நான் நினைக்கவில்லை.

சமாதான முயற்சிகளுக்குரிய நேரம் தற்போது கனிந்துள்ளது. சமாதானம் இன்னமும் சில நாட்களிலோ அன்றேல் சில மாதங்களிலோ ஏற்படும் எனக் கூறுவது கடினமானது.

இரு தரப்பினரும் ஒன்றாக பேச்சு வார்த்தைக்கு வரும் போதே இந்த நிலை சாத்தியமாகும். அது எப் போது ஏற்படும் என எமக்கு தெரியாது.

(5)

# கிழக்குத் தேர்தல் நிலைவரம் குறித்து அவதானித்து வரும் ஜப்பான் தூதரகம்

(கொழும்பு)

கிழக்குத் தேர்தல் களநிலைவரம் தொடர்பாக ஜப்பானியத் தூதுவராலயம் உன்னிப்பாக கவனித்து வருகிறது.

ஜப்பானியத் தூதரக அரசியல் விவகார முதல் செயலாளர் ஹிடேகி ஹட்டனாகா, சிரேஷ்ட அரசியல் உதவியாளர் ரி.பாலகுமார் ஆகியோர் மாவட்டம் தோறும் சென்று ஆராய்ந்து வரு கின்றனர் .

கடந்த முன்று தினங்களாக அம்பாறை மாவட்டத்தில் தங்கியிருந்து அரசியல் தலைவர்கள், பொதுமக்கள், பிரதிநிதிகள், நிர்வாக அதிகாரிகள் போன்ற பல தரப்பினரையும் இவர்கள் சந்தித்து வருகின்றனர். காரைதீவுக்கு செவ்வாயன்று விஜயம் செய்து பிரதேச செயலாளர் இராமகிருஷ்ணன், பிரதேச சபைத் தவிசாளர் நடராசா ஜீவராசா ஆகியோரிடம் நிலைவரங்களை அறிந்து கொண்டுள்ளனர்.

(5)

# இயேசுவின் விண்ணேற்பு அனுபவம் ஏற்றமிகு வாழ்வு

இவ்வுலகம் ஓர் ஆய்வு கூடம்; இதில் நம் மானிட வாழ்வு சோதனைக் குட்படுத்தப்படுகிறது. சோதனை வெற்றி பெற்றால் வாழ்வு சிறந்து உயர்வடைந்து எல்லோருக்கும் நன்மை பயக்குகின்றது.



இவ்வுலகம் ஒரு கலைக்கூடம்; இதில் நம் வாழ்வு பல கலைப் பயிற்சிக்கு உட்படுத்தப்படுகிறது. பயிற்சி வெற்றி பெற்றால் வாழ்வு எல்லோருக்கும் பயனளிக்கும் அரங்கேற்றமாகிறது.

ஆம் மனித வாழ்வு ஒரு தொடர் பயணமும் பயிற்சியும். இந்தப் பயணத்தில் வருகின்ற தடைகளைத் தாண்டி எழுந்து சவால்களை சந்தித்து சோதனைகளைச் சாதனைகளாக்குகின்றபோது பயணம் இனிக்கின்றது. வாழ்வும் ஏற்றம் பெறுகிறது. இப்படிப்பட்ட ஏற்றமிகு வாழ்வுக்குத் தான் நாம் ஒவ்வொருவரும் இன்று அழைக்கப்படுகின்றோம். எந்த ஒரு மனிதனும் பிறக்கின்றபோதே புகழோடோ சிறப்போடோ ஏற்றமோடோ பிறப்பதில்லை. ஆனால் அவன் வாழ்கின்ற முறையில் தான் ஏற்றம் பெறுகின்றான். உயர்வடை கின்றான். சிறப்புப் பெறுகிறான்.

நடந்து முடிந்துவிட்ட நிகழ்ச்சி அல்ல; மாறாக அது ஒரு தொடர் வாழ்வு.

விண்ணேற்பு வாழ்வு என்பது விண்ணுக்குச் சென்று மறைந்த வாழ்வு பெறுவது என்பதல்ல. மாறாக வாழ்வின் உயர்வை அடைந்து இன்றும் என்றும் அழியாமல் வாழ்ந்து கொண்டிருப்பது இந்த வாழ்வை இயேசு எப்படி அடைந்தார்?

ஆம் அவர் தந்தையாகிய கடவுளின் விருப்பத்தின்படி மனிதனாகப் பிறந்து வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் சோதனைகள் வேதனைகளாலும் துன்பங்கள் துயரங்களினாலும் எதிர்ப்புகள் ஏமாற்றங்களினாலும் புடமிடப்பட்டு உருவாக்கப்பட்டு உயிர்ப்பினால் உயர்த்தப்பட்டு மகிமைப்படுத்தப்பட்டு இறுதியில் ஏற்றமிகு வாழ்வை அடைந்தார். இது தான் இயேசுவின் விண்ணேற்பு.

## பரமபிதா காட்டிய பாதை

இயேசுவின் விண்ணேற்பு நிகழ்வும் நமக்கு இன்று ஒரு அனுபவமாக, ஏற்றமிகு வாழ்வு எனும் அனுபவத்திற்கு அழைக்கின்றது. இயேசுவின் விண்ணேற்பு நடந்து முடிந்துவிட்ட ஒரு நிகழ்ச்சியாகக் கொண்டாடப்படுவதைவிட அது நடந்து இன்றும் தொடர்ந்து கொண்டிருக்கின்ற ஒரு வாழ்வாகக் கொண்டாடப்பட வேண்டும்.

எனவே இயேசுவின் விண்ணேற்பு

இவ்வாழ்வை அடைய நாமும் இன்று அழைக்கப்படுகின்றோம். இதை அடைய நமக்கு முயற்சி மட்டும் வேண்டும்.

ஜோன் ரொபேர்ட்

## அயர்லாந்தின்...

விஜித்த ஹேரத் தெரிவித்துள்ள கருத்துக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் இத் தகவலை வெளியிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், அயர்லாந்தில் போராட்டம் நடத்தி வந்தவர்கள் தீர்வுத்திட்டத்தின் மூலம் இன்று ஜனநாயக வழிக்குத் திரும்பியுள்ளனர்.

இவ்வாறான திட்டமொன்றை இலங்கையிலும் சமர்ப்பிக்க தமது குழு தீர்மானித்துள்ளது.

இதன்மூலம் இலங்கையிலும் இனப்பிரச்சினைக்கு தீர்வைக் காணமுடியும் என்ற நம்பிக்கை இருப்பதாக அமைச்சர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

(ந-5)

## கொழும்பில் நேற்று பாரிய...

வீடுகளுக்குள் நுழைந்ததால் அங்கிருந்த பெண்களும் சிறுவர்களும் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டனர்.

சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட பெண்கள் உட்பட அனைவரையும் இரவு நேர ஆடைகளுடனேயே படையினரும் பொலிஸாரும் வலுக்கட்டாயமாக கைது செய்து கொண்டு சென்றனர். வீடுகளுள் சோதனை நடைபெற்ற அதேநேரம் வீதிகளிலும் கடும் சோதனை இடம்பெற்றது.

இப்பகுதிக்கான போக்குவரத்து சேவைகள் உட்பட அனைத்து போக்குவரத்துக்களும் இடைநிறுத்தப்பட்டிருந்தன. பயணிகள், வர்த்தகர்கள் என எவருமே இப்பகுதியை விட்டு வெளியேறவோ உள்நுழையவோ முடியாத வகையில் பாதுகாப்பு ஏற்பாடுகள் போடப்பட்டிருந்தன.

இந்தப் பெரும் தேடுதலில் கைது செய்யப்பட்ட 300 க்கும் அதிகமானோர் ஜிந்துப்பிட்டி விளையாட்டு மைதானத்துக்கு கொண்டு செல்லப்பட்டு முற்பகல் 10.30 மணிவரை தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். அதன் பின்னர் தனியாருக்குச் சொந்தமான இரண்டு பேருந்துகளை கொண்டு வந்த படையினர் அந்த பேருந்துகளில் கைது செய்யப்பட்டவர்களை ஏற்றி புறக்கோட்டை பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு சென்றனர்.

அங்கே இவர்களிடம் துருவித்துருவி விசாரணைகள் இடம்பெற்றன. தொடர்ந்தும் 15 பேர் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். சந்தேகத்தின் பேரிலேயே 15 பேரை தடுத்து வைத்திருப்பதாக தெரிவித்துள்ள புறக்கோட்டை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி இவர்களிடம் தொடர்ந்து விசாரணைகள் இடம்பெறுவதாகவும் தெரிவித்தார்.

அண்மைக்காலமாக கொழும்பில் தமிழர்கள் செறிவாக வாழும் பகுதிகளில் தீவிர தேடுதல்களும் கைதுகளும் இடம் பெறுவது குறித்து கொழும்பில் உள்ள மக்கள் மத்தியில் அச்சம் மேலோங்கியுள்ளது.

(ந-5)

## மட்டக்களப்பில்...

சபை நிர்வாகம் மறுத்து விட்டது. இப்போது பாதுகாப்பற்ற நிலையில்தான் வீட்டு முற்றங்களில் கூட்டங்களை நடத்த வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. தேர்தல் பிரசாரப் பணிகளுக்கென முன்னர் ஹெலிகொப்டரை வழங்குவதாக அரசாங்கம் தெரிவித்திருந்தது. பின்னர் ஹெலிகொப்டர்களை வழங்க மறுத்து விட்டது என்றார்.

(ந-5)

# முகமாலையில் அவர்கள்...

மற்றும் ஆட்லறிகளை பயன்படுத்தியதால் மோதல் உக்கிரமடைந்தது. எனினும் எமது தாக்குதலில் 160 புலிகள் கொல்லப்பட்டதாக எமது புலனாய்வுப் பிரிவு உறுதி செய்தது.

700 மீற்றர் முன்னேறிய நாம் மீண்டும் 100 மீற்றர் பின்னோக்கி நகர்ந்து காயம் அடைந்த எமது படையினரைத் தேடினோம். அதன்போது 47 படையினர் கொல்லப்பட்டிருந்தனர். 33பேர் காணாமல் போயிருந்தனர். சுமார் 300 படையினர் காயமடைந்திருந்தனர். அதில் 200 பேர் சிறு காயங்களுக்கு இலக்காகியிருந்தமையால் அவர்கள் விரைவாக சிகிச்சை பெற்று மீண்டும் களமுனைக்கு திரும்பியுள்ளனர்.

சுமார் 100 பேருக்கு நீண்ட சிகிச்சை அவசியமாகியுள்ளது. எமது சிறிதளவு ஆயுதங்களையே புலிகள் கொண்டு சென்றுள்ளனர்.

நாம் தொடர்ந்தும் அங்கு எமது பலத்தை உறுதி செய்து வருகின்றோம். பிரதேசம் முழுவதும் நிலக்கண்ணி மற்றும் கவச வாகன அழிப்பு வெடிகளைப் புலிகள் புதைத்துள்ளனர்.

இவையனைத்தையும் அகற்றி பிரதேசத்தை வழமை நிலைக்கு கொண்டுவர படையினர் பெரும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். சுமார் 30பேர் புலிகளின் கண்ணி வெடிகளுக்கு இலக்காகி காயமடைந்துள்ளனர். யுத்தத்தில் இவை சாதாரணமான நிலைமையாகும். நாம் அதற்கு தயாராக வேண்டும்.

**கேள்வி:-** இந்த தாக்குதலின் பின்னர் படையினரின் மனோ தைரியம் பற்றிய உங்களின் மதிப்பீடு என்ன?

**பதில்:-** இந்தத் தாக்குதலில் படையினர் எந்த வகையிலும் அதைரியம் அடையவில்லை என்பதை மிகத் தெளிவாக கூறுகிறேன். அவர்கள் நன்றாகப் போரிட்டார்கள். எமது சக்தி பலவீனமானதல்ல. ஒரு இலட்சத்து 67 ஆயிரம் படையினரை வைத்திருக்கும் எமக்கு, எமது எதிர்கால வேலைத் திட்டங்களுக்கு இது ஒரு தடையல்ல.

படையினரின் தைரியம் பலவீனமடைந்துள்ளதாக நான் காணவில்லை. ஏனைய களமுனைகளிலும் தைரியம் குறைவடையவில்லை. 2 படையணிகளினதும் 5 பற்றாலியன்கள் இந்தத் தாக்குதலில் ஈடுபட்டன. முன்னைய மோதல்களுடன் ஒப்பிடுகையில் இந்த மோதலில் காயமடைந்தவர்கள் குறைவாகும்.

முகமாலை பாதுகாப்பு முன்னரங்கில் அடிக்கடி சிறு சிறு மோதல்கள் இடம்பெற்று வந்துள்ளன. சுமார் ஆயிரத்து 400 படையினர் எமது பதுங்கு குழிகளில் உஷார் நிலையில் இருந்தனர். அவர்கள் புலிகளின் யுத்த பலத்தை அறிந்தே இருந்தனர். எம்மிடம் திறமையான அதிகாரிகள் உள்ளனர். இப்பொழுது உயிரே போனாலும் போர் புரியும் மனோநிலையை அவர்களிடம் நாம் ஏற்படுத்தியிருக்கின்றோம்.

இந்த மோதலில் புலிகளுக்கு ஏற்பட்ட இழப்பை எடுத்துக் கொண்டால் நாம் சரியாக போரிடாவிட்டால் 160 புலிகள் உயிரிழந்திருக்க முடியாதே. உலகில் எந்த இராணுவமாவது காயடையாது; உயிரிழக்காது போரிட்டதா?

காயமடைந்தவர்கள், உயிரிழந்தவர்கள் பற்றி அறிந்து சந்தோஷமடையும் அதே நேரம், படையினர் கீழே விழும்போது கைதட்டுவதற்கு காத்திருக்கும் பிரிவினரும் நம்மிடையே உள்ளனர். அவர்கள் சும்மாவேனும் புலிகளில் எத்தனை பேர் உயிரிழந்தனர் எனக் கேட்பதில்லை.

மலர்ச்சாலைகளுக்கு சென்று, மருத்துவமனைகளுக்குச் சென்று உயிரிழந்தவர்கள், காயமடைந்தவர்கள் அதிகமாக இருப்பின் மகிழ்பவர்களும் உள்ளனர். உயிரிழந்த, காயமடைந்தவர்கள் போரிட்டதை நாம் வீரத்துடன் பார்க்க வேண்டும்.

யுத்த களத்தில் படையினருக்கு தவறு ஏற்பட்டாலும் நாம் அவர்களுக்கு தைரியமளிக்கவேண்டும். அவர்கள் தோல்வியடைந்தவர்கள் என யாரேனும் கூறுவார்களாயின் அவர்கள் துரோகிகளாவர்.

**கேள்வி:-** 25 வருடங்களுக்கும் மேலாக விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதல்களைப் பார்க்கையில் அவர்களை இலகுவாக எண்ணிவிட முடியாது. இராணுவத் தளபதி என்ற வகையில் நீங்கள் அவர்களின் யுத்த பலத்தை எவ்வாறு மதிப்பிடுகிறீர்கள்?

**பதில்:-** உலகிலுள்ள கெரில்லா போராளிகளிடையே புலிகள் சக்திமிக்கவர்கள் என்பதை தெளிவாகக் கூறுகிறேன். எமது நாட்டில் மோதல்கள் இடம்பெறும் பிரதேசங்களை எடுத்தால் புலிகள் பலம் மிக்கதாக இருந்தது முகமாலை பிரதேசத்திலேதான்.

புலிகளை ஒருபோதும் குறைத்து மதிப்பிட முடியாது. இந்த மோதலுக்கு முன்னர் புலிகளின் ஆயுதங்கள் பற்றிய விபரங்கள் எம்மிடம் இருந்தன. இந்த மோதலில் புலிகள் பயன்படுத்துவார்கள் என எண்ணிய ஆட்லறி எதிர்ப்பு உட்பட அவர்களின் முழுமையான ஆயுதங்கள் பற்றிய அறிக்கை என்னிடமிருந்தது. அதனால் நாம் புலிகளுக்கு வெற்றிகரமாக முகம் கொடுத்தோம்.

எனினும் தற்போது புலிகளின் ஆட்பலம் குறைவடைந்துள்ளது. யுத்த களத்தில் அவர்களின் பலம் குறைவடைந்து வருகிறது. புலிகள் இந்த யுத்தத்தில் தோல்வியடையாது இருக்க இருந்த ஒரே மாற்றுவழி யாழ். நகரை கைப்பற்றுவதாகும். எனினும் அவர்கள் அந்த இலக்கை எட்டவில்லை.

சில சந்தர்ப்பங்களில் அவர்கள் அந்த முயற்சியில் ஈடுபட்டனர். மாவீரர் தினம் போன்ற காலங்களில் அவர்கள் அங்கு தாக்குதல் நடத்த முயன்றனர். எனினும் முடியாது போனது. இந்த நேரத்திலும் அந்த முயற்சி சாத்தியமாகுமா என பார்ப்பதற்கு அவர்களுக்கு தேவையாகியிருக்கலாம்.

முகமாலை மோதலில் முன்னால் இருந்தது விடுதலைப் புலித் தலைவர்கள், பின்னால் இளையவர்கள் இருந்தனர். அவர்கள் அவ்வாறே சம்பிரதாயமாக யுத்தம் செய்வார்கள். அதனால்தான் அவர்கள் திறமையாகப் போரிட்டார்கள்.

இறந்தவர்களில் புலிகளின் முக்கியஸ்தர்களும் இருந்தனர். இவ் தாக்குதலுக்கென புலிகள் சுமார் 100 கடற்புலிகளையும் ஈடுபடுத்தியிருந்தனர். இறந்தவர்களின் உடைகளிலிருந்து நாம் அவற்றை உறுதி செய்து கொண்டோம். அவர்களுக்கு ஆட்பலம் குறைவென்பதையே அது காட்டுகிறது.

மணலாறு மோதல்களின் போதும் 16 வயதிற்கு குறைவான பெண் பிள்ளைகள் இருந்தனர். முகமாலையில் நாம் முதலில் அவர்களைத் தாக்கி விரட்டினோம். வடக்கில் அவர்கள் பெரும் பின்னடைவுக்கு இலக்கானார்கள்.

அவர்கள் வடக்கிலிருந்து கிழக்கிற்கு வந்தனர். நாம் வாகரையை பிடித்த பின்னர் கிழக்கு விழ ஆரம்பித்தது. யுத்தத்தின் அதிக வெற்றி எம் பக்கம் வந்தது. அவர்களிடமிருந்த காவல்துறை, நீதிமன்றம், காவலரண்கள் மற்றும் மருத்துவமனைகள் என்பன இப்பொழுது அவர்களிடம் இல்லை.

புலிகளின் ஈழக்கனவு இப்போது விழ ஆரம்பித்துள்ளது. இப்பொழுது அவர்கள் இருக்குமிடத்திலிருந்து ஈழக் கனவிற்கான தூரம் நீளமானது. பிரபாகரனின் ஆயுள் காலத்தினுள் அவர்கள் அந்த இடத்திற்கு செல்வது கனவாகிவிடும்.

**கேள்வி:-** சுமார் ஓராண்டு காலமாக புலிகளுக்கும் படையினருக்கும் இடையில் இடம்பெற்ற மோதலின் பின்னர் மடுத்தேவாலயம் மீட்கப்பட்டமை பற்றி உங்கள் கருத்து?

**பதில்:-** கடந்த 24ஆம் திகதி மடுத் தேவாலயம் உட்பட பாலம்பிட்டிவரை 8 கிலோ மீற்றர் தூரம் வரையான பகுதியில் பலத்தை உறுதி செய்வதற்கு எம்மால் முடிந்தது.

இந்தப்பிரதேசத்தை பிடித்தபோது புலிகளுடன் பெரும் மோதலில் ஈடுபடவில்லை. மடுத்தேவாலயத்தின் கூரை புலிகளின் மோட்டார் தாக்குதலால் சிறிது பாதிக்கப்பட்டது.

தேவாலயத்திற்கு அருகே சிறிய கட்டடமொன்றை அவர்கள் வெடிக்க வைத்துள்ளனர். அது தவிர தேவாலயத்தை சுற்றி அவர்கள் புதைத்திருக்கும் கண்ணிவெடிகளை அகற்றி பிரதேசத்தை வழமைக்கு கொண்டு வர படையினர் தற்போது நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

தற்போது இந்தப்பிரதேசம் படையினரின் கட்டுப்பாட்டின் கீழ் பாதுகாப்பான இடமாக உள்ளது. நான் இவ்வாண்டினுள் பக்தர்களுக்கு மடுத்தேவாலயத்தை வணங்குவதற்கு வசதிகளை செய்து கொடுப்பதாக உறுதியளித்திருந்தேன்.

இதற்கமைய வெகுவிரைவில் மடுமாதா சொரூபத்தை தேவாலயத்தில் வைக்குமாறு நான் ஆயரிடம் கேட்டுள்ளேன். அது அவரின் கடமை. விரைவில் அந்தப் பிரசேத்தில் புதைத்திருக்கும் அனைத்துக் கண்ணிவெடிகளையும் அகற்றி பக்தர்களுக்கு அங்கு வர வாய்ப்பளிக்கப்படும்.

தற்பொழுது வன்னியிலிருந்து ஓமந்தையூடாக மடுத்தேவாலயத்திற்கான பாதை திறக்கப்பட்டுள்ளது. ஏ-9 பாதையும் திறக்கப்பட்டுள்ளது. மடு-வவுனியா பக்கத்திலிருந்து முதல் 5 கிலோ மீற்றர் தூரம் செல்வதற்கு எமக்கு சுமார் 6 மாதங்கள் எடுத்தன.

மடு தேவாலய மீட்பானது நாம் பெற்ற மிகப் பெரிய வெற்றியாக காண்கிறேன்.

**கேள்வி:-** கிழக்கை மீட்டதை போன்று வடக்கை மீட்பது மிக இலகுவான காரியமென நீங்கள் எண்ணுகிறீர்களா?

**பதில்:-** கிழக்கில் ஈடுபடுத்திய பலத்தை வடக்கிலும் ஈடுபடுத்துவோம். யாழ்ப்பாணத்தில் சுமார் 34 ஆயிரம் படையினர் உள்ளனர். அங்கு இருக்கவேண்டிய படையணிக்கு மேலதிகமாக இன்னுமொரு படையணி இருந்தது. இப்பொழுது அங்கு மேலதிகமாக இரண்டு படையணிகள் உள்ளன.

யாழ்ப்பாணத்துக்கு உள்ளேயும் நாம் பலமாக உள்ளோம். யாழ்ப்பாணத்தை பிடிக்க வந்தால் அது பிரபாகரனின் இறுதிப் பயணமாக இருக்கும். நிலத்தில் இடம்பெறும் மோதல்களில் முகமாலையில் இரு படையணிகளும் மன்னாரில் ஒரு படையணியும் மணலாற்றில் ஒரு படையணியும் பங்கெடுத்துள்ளது.

மணலாற்றில் 4 கிலோ மீற்றர் நீளமான முன்னரங்கில் 12 கிலோ மீற்றர் பரப்பளவு பிரதேசத்தில் எமது பலத்தை நாம் தற்பொழுது உறுதிப்படுத்தியுள்ளோம். கிழக்கில் உள்ள கடைசி விடுதலைப்புலி உறுப்பினர் இறக்கும் வரை அங்குள்ள ஒரு படைவீரரையும் அங்கிருந்து வடக்கிற்கு கொண்டு செல்லப் போவதில்லை. மடுவிலிருந்து கிளிநொச்சி நோக்கியுள்ள 12 கிலோ மீற்றர் தூரத்திற்கு நாம் பலத்தை உறுதிப்படுத்தி வருகிறோம். வவுனியா-மடு முன்ரங்கிலும் இன்னும் 10 கிலோ மீற்றர் தூரம்வரை நாம் முன்னேறினால் புலிகளுக்கு மிகவும் கடினமாகிவிடும்.

திருகோணமலை, மட்டக்களப்பு கஞ்சிக்குடிச்சியாறு ஆகிய பிரதேசங்களில் நாம் சிறப்பான முறையில் போரிட்டோம். கதிர்காமம்-புத்தல பிரதேசத்திலும் கும்புக்கன் ஓயாவரை ஆயிரத்து 400 படையினரை ஈடுபடுத்தி அப்பகுதிகளை எமது கட்டுப்பாட்டினுள் வைத்துள்ளோம். கடந்த ஒகஸ்ட் முதல் இதுவரை இடம்பெற்ற மோதல்களில் சுமார் 7 ஆயிரம் விடுதலைப் புலிகளை அழித்துள்ளோம். அதற்கமைய பார்க்கும் போது வடக்கை மீட்பது எமக்கு அவ்வளவு கடினமாகாது.

**கேள்வி:-** பல்லாயிரக்கணக்கான உயிர்கள் அழிந்த, அழிந்துவரும் இந்தப் பயங்கர யுத்தத்தின் முடிவு எவ்வாறு அமையும்?

**பதில்:** இந்த யுத்தத்தை வெற்றிகரமாக கெண்டு செல்வதற்கு தேவையான வளங்கள் எமக்கு கிடைத்துள்ளன. ஆட்பலம் உள்ளது. யுத்த களத்தில் இருப்பவர்களின் நலன்கள் சிறந்த நிலையில் உள்ளன. படையினரின் மனோ வலிமையும் உயரிய நிலையில் உள்ளது. இதுவரை காலமும் நாம் புலிகளுக்கு ஏற்படுத்திய அழிவுகளைப் போல் எதிர்கலத்திலும் அழிவுகளை ஏற்படுத்தினால் யுத்தத்தை முடிவிற்கு கொண்டுவருவது சிரமமல்ல. புலிகளின் உயிரிழப்புக்களை கணக்கிட்டுக் கொண்டு யுத்தம் செய்ய முடியாது. நாம் இந்த இடத்தை அடைவதற்கு அதிகமாக உழைத்துள்ளோம்.

வருடத்தின் 365 நாள்களும் யுத்தம் செய்துள்ளோம். எமக்கு போயா விடுமுறை, ஞாயிறு, புத்தாண்டு, வெசாக், பொசன், நத்தார் விடுமுறைகள் இல்லை. அனைவரும் சூரிய மங்களத்தை நடத்தும் போது பட்டாசு கொழுத்தும் போதும் நாம் காட்டில் வெடிவைக்கிறோம். மோட்டார் அடிக்கிறோம்.

எனது பதவிக்காலத்தில் கட்டாயமாக யுத்தத்தில் வெற்றி பெறுவோம். யுத்தத்தை பிழையான வகையில் பார்த்தவர்கள் அன்று கவலை அடையவேண்டி ஏற்படும். எம் மீது சேறு பூசி எமது மனோ தைரியத்தை குலைக்க முற்படுபவர்களை எண்ணி நாம் கவலையடைகிறோம்.

புலிகள் உயிரிழப்பதை விரும்பாதவர்கள் உள்ளனர். நாம் செய்யும் நல்லவற்றை கூற விரும்பாதவர்களும் உள்ளனர். எனினும் நாம் அயராது எமது பயணத்தை முன்னோக்கி கொண்டு செல்வோம். போரை வெல்லவேண்டும் என கூறுபவர்கள் எம்மீது நம்பிக்கை வைக்கலாம்.

25 வருட பழமையான காயத்தை ஒரே தடவையில் குணமாக்க முடியாது. குணமடைந்தாலும் வடு மறைய சிறிது காலமெடுக்கும்.

(ந-5)

தரம்: 5 புலமைப்பரிசில் 2008
ஆயிரக்கணக்கான மாணவர்களை சித்திபெற வைத்த இலங்கை புகழ் திருமலை. எஸ். கணேசலிங்கம் அவர்களின்...
வெற்றித்தேர்வு-13
கொழும்பு புனிலங்கா வெளியீடு
மாவட்டரீதியான பரீட்சை இன்று
சயன்ஸ் அக்கடமி. நல்லூர்.
நாளை அனைத்து புத்தகசாலைகளிலும் பெறலாம்.
தொடர்புகளுக்கு : 021 222 9016.

GLOBAL
Multi Trade Center
College Road, Jaffna Hindu College Ground Junction, Jaffna.
→Sports → Electronics → Fancy
→ Stationery → Shoes
விற்பனை நடைபெறுகிறது
TP:-0777179461
Proprietor:- R.W.Jeffrey & K.Ramanan

இப்பத்திரிகை வலம்புரி அச்.கோ ஸ்தாபனத்தாரால் இல.2, இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.05.2008இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.